Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, FEBRUARY 3, 2022

வியாழக்கிழமை பெப்ரவரி 03, 2022 | ஒளி: 07 கதிர்: 222 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | விலை ரூ.10




பாடசாலைகளுக்கு

## மார்ச் 7 வரை விடுமுறை

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகளை நடத்துவதற்காக அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு பெப்ரவரி 07ஆம் திகதி முதல் மார்ச் 07ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, பாடசாலைகளின் அனைத்து வகுப்புகளுக்கும் விடுமுறை வழங்கப்படவுள்ளதுடன், மார்ச் 7ஆம் திகதியே பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தொடர்ச்சி P2

ஒமிக்ரோன் அலை பரவினாலும்



# மூடத் தேவையில்லை

ஒமிக்ரோன் அலை பரவினாலும் தற்போதைய சூழ்நிலையில் நாட்டை மூட வேண்டிய அவசியமில்லை என ராகம மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் அர்ஜுன டி சில்வா தெரிவித்தார்.

பூஸ்டர் டோஸைப் பெற்றுக்கொள்ளாவிடின், எதிர்காலத்தில் மரண எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் சுட்டிக்காட்டினார்.

கடுமையாகப் பரவி, திடீரென பரவல் குறைவது ஒமிக்ரோனின் அடிப்படை அம்சம் என்றும் இலங்கையில் நீண்ட காலம் ஒமிக்ரோன் நீடிக்காது என்றும் கூறிய அவர், உலகம் முழுவதுமுள்ள பல நாடுகளில் இவ்வாறே ஒமிக்ரோன் பரவியதாகச் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



மீனவர்களின் போராட்டத்தால்

## பருத்தித்துறை பிரதேச செயலகம் முற்றுகை

யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு நேற்றையதினம் (02) மீனவர்கள் முன்னெடுத்த போராட்டத்தால் பிரதேச செயலகத்தின் செயற்பாடுகள் யாவும் பாதிக்கப்பட்டன.

தொடர்ச்சி P2



## பைசர் செலுத்திய மாணவிகள் ஐவர் மயக்கம்

■ எம். கிருஷ்ணா

பொகவந்தலாவ பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட, சென்மேரீஸ் மத்திய கல்லூரியில் பைசர் தடுப்பூசி செலுத்திக்கொண்ட ஐந்து மாணவிகள் மயக்கம் அடைந்த நிலையில், பொகவந்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



ராகம மருத்துவ பீட தாக்குதல்

## பாரபட்சமின்றி சட்டத்தை அமல்படுத்தவும்

ராகம மருத்துவ பீடத்தில் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் சம்பவத்துடன் தொடர்புடைய அனைவருக்கும் பாரபட்சம் இன்றி சட்டத்தை அமல்படுத்துமாறு பொது பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் (ஓய்வுபெற்ற) சரத் வீரசேகர பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2



திருகோணமலை

## சண்முகா இந்துக் கல்லூரியில் 'அபாயா' சர்ச்சை

### பாடசாலைக்கு முன்பாக மாணவிகள் போராட்டம்

■ பைஷல் இஸ்மாயில்

அபாயா அணிந்து வர வேண்டாமெனக் கூறியிருந்த போதிலும், ஆசிரியை ஒருவர் குறித்த ஆடையுடன் கல்லூரிக்கு சென்றதால் திருகோணமலை சண்முகா இந்துக் கல்லூரியில் சர்ச்சை நிலை ஏற்பட்டது.

ஆசிரியையின் இந்தச் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, திருகோணமலை சண்முகா இந்துக் கல்லூரிக்கு முன்பாக, மாணவிகள் நேற்று (02) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2017ஆம் ஆண்டு இப்பாடசாலையில் அபாயா பிரச்சினை பாரிய பிரச்சினையாக உருவெடுத்த நிலையில், அப்பாடசாலையில் ஏற்கெனவே கடமையாற்றி வந்த ஆசிரியை மீண்டும் பாடசாலைக்கு நேற்று (02) சென்றுள்ளார்.

தொடர்ச்சி P2

கறுப்புப் பண ஆயுதக் கொள்வனவு

## சபையில் நிதியமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும்



யுத்த காலத்தில் ராஜபக்ஷ அரசாங்கம், வடகொரியாவிடம் இருந்து கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தி ஆயுதம் வாங்கியதாக நிதியமைச்சர் தெரிவித்த கருத்து, சர்வதேச ரீதியில் நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தியுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ராகம மருத்துவ பீடத்தின் மாணவர்கள் நால்வர் காயம்

### மாணவர்கள் இருவர் கைது; சர்ச்சைக்குள் முக்கிய புள்ளி

ராகம மருத்துவ பீட விடுதியில் நேற்று (02) காலை இடம்பெற்ற மோதலில் நான்கு மருத்துவ மாணவர்கள் காயமடைந்துள்ளதாக ராகம பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மருத்துவ மாணவர்களில் மூவர் கொழும்பு வடக்கு (ராகம) போதனா வைத்தியசாலையிலும் ஒருவர் நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



## நாளை பூட்டு

74 ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு அனைத்து மதுபான சாலைகள், இறைச்சி விற்பனை நிலையங்கள் ஆகியவற்றை நாளைய தினம் (04) மூடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிவித்தலில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.



தேவாலய கைக்குண்டு விவகாரம்

## சந்தேகநபர்கள் மூவர் விடுதலை

பொரளையிலுள்ள அனைத்து புனிதர்களின் தேவாலயத்தில் கைக்குண்டு வைத்த சம்பவம் தொடர்பில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த தேவாலயத்தின் ஊழியர்கள் மூவரையும் விடுதலை செய்யுமாறு கொழும்பு மேலதிக நீதவான் ரஜிந்திர ஜயசூரிய, நேற்று (02) கட்டளையிட்டார்.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய பிரசாத் சிகேரா, இந்திக பெரேரா, சந்தோஷ் சிவசுந்தரம் ஆகியோர் விடுவிக்கப்பட்டனர்.

தொடர்ச்சி P2

## 21 மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவும்

### மத்திய அரசுக்கு முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்

இலங்கை கடற்படையால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள 21 மீனவர்களை விடுவிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென மத்திய அரசுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து, நேற்று முன்தினம்(01) மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருந்து 12 மீனவர்கள் தென்கிழக்கே மீன்பிடிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டு, அங்குள்ள காங்கேசன்துறை கடற்படைத் தளத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.



இதேபோன்று, மற்றொரு படகில் இருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 மீனவர்களும் புதுச்சேரியைச் சேர்ந்த 3 மீனவர்களும் இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## இ.மி.சவின் பிரச்சினைகள் அதிகரிப்பு

### களனிதிஸ்ஸவுக்கு இன்றுடன் எரிபொருள் தீர்கிறது

இலங்கை மின்சார சபையின் பிரச்சினைகள் மேலும் அதிகரித்து வருவதாகத் தெரிவித்த இலங்கை மின்சார சபை கூட்டுத் தொழிற்சங்க கூட்டணியின் அழைப்பாளர் ரஞ்சன் ஜயலால், மின்சார நெருக்கடியை சமாளிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குறுகிய கால தீர்வுகளை வழங்குவதற்கே முயல்கின்றனர் என்று தெரிவித்தார்.

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

தொடர்ச்சி P2

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதான

## 4 பேருக்கு பிணை

■ கனகராசா சரவணன்

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நால்வரையும் தலா 2 இலட்சம் ரூபாய் சரீரப்பிணையில் விடுவிக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் கருப்பையா ஜீவராணி, நேற்று (02) உத்தரவிட்டார்.

மேலும், மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறும் கட்டளை பிறப்பித்தார்.

கடந்த 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ஆம் திகதி அரசால் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் மாவீரர் தினத்தையிட்டு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் உருவப்படம் அடங்கிய படங்களை

தொடர்ச்சி P2

## "ஸ்ரீ லங்காவின் சுதந்திர நாள் தமிழ்த் தேசத்தின் கரிநாள்"

### முள்ளிவாய்க்காலில் மாபெரும் போராட்டத்துக்கு அழைப்பு

■ சண்முகம் தவசீலன், க. அகரன்

ஸ்ரீ லங்காவின் சுதந்திர நாள், தமிழ் தேசத்தின் கரிநாள் எனும் தொனிப் பொருளில் நாளை (04) முள்ளிவாய்க்காலில் முன்னெடுக்கவுள்ள மாபெரும் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புகள், பாதிக்கப்பட்ட தரப்பினர் அனைவரும் ஒன்றிணைந்து இப்போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர்.

குறித்த போராட்டத்தில் அனைவரையும் பங்குகொள்ளுமாறு முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று (02) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட பொதுவில்

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

## பருத்தித்துறை பிரதேச செயலகம் முற்றுகை

அண்மையில் வத்திராயன் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்களின் உயிரிழப்புக்கு நீதி கோரியும் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராகவும் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதேச செயலகத்தின் இரண்டு வாசல்களையும் முடக்கி அதற்கு முன்பாக அமர்ந்திருந்து மீனவர்கள் போராட்டத்தை முன்னெடுத்திந்தனர்.

அத்தோடு யாழ்ப்பாணம் - பருத்தாத்துறை பிரதான வீதியையும் மறித்து வீதியில் இந்திய மீனவர்களால் அறுத்து நாசமாக்ப்பட்ட வலைகளையும் போட்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனால் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியின் போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டிருந்ததோடு பாடசாலை மாணவர்கள் மாத்திரம் வீதியால் செல்லுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

போராட்டம் இடம்பெற்ற பகுதியில் பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பாரபட்சமின்றி சட்டத்தை அமல்படுத்தவும்

அதற்கமைய பொலிஸ்மா அதிபரின் பணிப்புரையின் பேரில் மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன், சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த இரண்டு விசேட புலனாய்வு குழுக்களை நேற்று (02) நியமித்தார்.

இந்த இரண்டு விசாரணைக் குழுக்களும் களனி பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன.

அரச நிறுவனமொன்றுக்கு சொந்தமான வாகனமும் அதன் சாரதியும் மருத்துவ மாணவர்களால் ராகம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து சந்தேக நபர்களையும் கண்டுபிடிப்பதற்கு முழுமையான விசாரணை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ள அமைச்சு, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆதாரங்களின் அடிப்படையில் உரிய தனிப்பட்ட சாட்சியங்களும் ஆராயப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

## ராகம மருத்துவ பீடத்தின் மாணவர்கள் நால்வர் காயம்

இரண்டு மாணவர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலின் போது, ஒரு குழுவுக்கு ஆதரவாக 15 வெளி நபர்கள் வந்து தாக்குதலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த வெளி நபர்களில் இராஜாங்க அமைச்சரொருவரின் சாரதியைக் கைது செய்துள்ள ராகம பொலிஸார், உத்தியோகபூர்வ வாகனத்தையும் கைப்பற்றியுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர்.

வெளியிலிருந்து வந்த குழுவினரால் அழைத்து வரப்பட்ட மாணவர், நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையிலும், காயமடைந்த மூன்று மாணவர்கள் கொழும்பு வடக்கு போதனா

**அந்த இராஜாங்க அமைச்சருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பில், அரசாங்கத் தரப்புக்குள் ஆலோசிக்கப்பட்டு வருவதாக அறியமுடிகின்றது**

வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில், மாணவர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். இந்நிலையில், சம்பவ இடத்தில் நின்றிருந்த வாகனம், இராஜாங்க அமைச்சர் ஒருவருடையது என விசாரணைகளில் இருந்து கண்டறியப்பட்டது. அதனையடுத்து, அந்த இராஜாங்க அமைச்சருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பில், அரசாங்கத் தரப்புக்குள் ஆலோசிக்கப்பட்டு வருவதாக அறியமுடிகின்றது.

## சந்தேகநபர்கள் மூவர் விடுதலை

சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தேவாலய உறுப்பினர் முனீந்திரனை விடுவிப்பது தொடர்பில் எதிர்வரும் நாள்களில் பரிசீலிக்கப்படும் என சட்டமா அதிபர் நீதிமன்றில் அறிவித்துள்ளார். சம்பவம் தொடர்பான நீதவான் விசாரணை நேற்று (02) மீண்டும் நீதிமன்றத்தில் இடம்பெற்ற போதே மேற்குறிப்பிட்ட விடயங்கள் அறிவிக்கப்பட்டன.

## 4 பேருக்கு பிணை

பேஸ்புக்கில் தரவேற்றம் செய்த குற்றச்சாட்டில் நால்வரும் கைதுசெய்யப்பட்டனர்.

கே.ஜெகன், வை. யோகேஸ்வரன், டபிள்யூ. விவேக், கே. சோபானந்தன் ஆகியோர் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கும் வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தில் இவர்களின் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சட்டமா அதிபர் ஆலோசனைக்கமைய பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

## மூடத் தேவையில்லை

பூஸ்டர் டோஸ் எடுக்க மக்களை ஊக்குவிக்க வேண்டும் என்றும் அதைப் பெற்றவர்களுக்கு தடிமன் போன்ற நிலையை மட்டுமே ஒமிக்ரோன் ஏற்படுத்துகிறது என்றும் குறிப்பிட்டார்.

தடுப்பூசி பயனுள்ளதாக இருப்பதால், அறிகுறியற்ற நோயாளிகள் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்படலாம் எனவும் ஒட்சிசன் குறைபாடு, சிக்கல்கள், முதியவர்கள், தடுப்பூசி போடப்படாதவர்கள் மட்டுமே விரைவில்

**திருவிழாக்கள், இசை நிகழ்ச்சிகளை சுகாதார வழிகாட்டு தல்களுக்கு அமைய நடத்துவது தவறல்ல எனவும் தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் நாட்டை மூட முடியாது**

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டும் என்றார்.

தற்போதைய சூழ்நிலையில் பாடசாலை மாணவர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுப்பது முக்கியம் எனவும் குறிப்பாக தடுப்பூசி போடப்படாத பாடசாலைகள் தொடர்பில் சுகாதார பிரிவினர் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

திருவிழாக்கள், இசை நிகழ்ச்சிகளை சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய நடத்துவது தவறல்ல எனவும் தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் நாட்டை மூட முடியாது எனவும் மேலும் தெரிவித்தார்.

## சண்முகா இந்து கல்லூரியில் ‘அபாயா’ சர்ச்சை

இந்நிலையில், குறித்த பாடசாலை அதிபர் காரியாலயத்தில் கடமையைப் பொறுப்பேற்கச் சென்ற நிலையில், பாடசாலை நிர்வாகத்துக்கும் குறிப்பிட்ட பெண் ஆசிரியைக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

பாடசாலையின் அதிபர் தன்னை தாக்கியதாக அபாயா அணிந்து வந்த ஆசிரியையும், அபாயா அணிந்து வந்திருந்த ஆசிரியை தன்னைத் தாக்கியதாக அதிபரும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்கென சென்றிருந்தனர்.

எனினும், இந்த விவகாரம் தொடர்பில் மாணவிகளால் முன்னெடுக்கப்படும் போராட்டம் தொடர்ந்த நிலையில், இவ்விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 21 மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை....

2021ஆம் ஆண்டு டிசெம்பரில் நடந்த 3 வெவ்வேறு சம்பவங்களில் தமிழக மீனவர்கள் 68 பேர், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, தமிழகம் மற்றும் மத்திய அரசு மேற்கொண்ட கடும் முயற்சிக்குப் பிறகு விடுவிக்கப்பட்டபோதும் அவர்கள் தாயகம் திரும்பக் காத்திருக்கின்றனர்.

இந்த நிலையில், தமிழக மீனவர்கள் மீண்டும்

**நமது மீனவர்கள் நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்படுவது, அவர்களது குடும்பத்தினரை வறுமையில் தள்ளுகின்றது**

இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள சம்பவம், மீனவ மக்களிடையே பீதியையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை சிறைகளில் உள்ள நமது மீனவர்கள் நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்படுவது, மீனவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் துயரத்துக்கு ஆளாக்குவதோடு, அந்தக் குடும்பங்களும் வறுமையில் தள்ளப்படுகின்றன.

ஆகையால், கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் அனைவரையும் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அந்தக் கடித்தத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## மார்ச் 7 வரை விடுமுறை

எதிர்வரும் 7ஆம் திகதி முதல் மார்ச் 5ஆம் திகதி வரை க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் இடம்பெறவுள்ள நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இம்முறை பரீட்சைக்கு மொத்தம் 345,242 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ள நிலையில், பரீட்சை நடத்தும் போது கடிகாரத்தில் நேரம் துல்லியமாக இருப்பதை உறுதி செய்யுமாறு அனைத்து கண்காணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சை பரீட்சார்த்திகளை இலக்காகக் கொண்ட கல்வி வகுப்புகள், கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள், விரிவுரைகளை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்வதற்கும் நேற்று முன்தினம் (01) நள்ளிரவு முதல் பரீட்சை முடியும் வரை தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பைசர் ஏற்றிய மாணவிகள் ஐவர் மயக்கம்

சென்மேரீஸ் மத்திய கல்லூரி, ஹொலி ரோசரி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்றுவருகின்ற 12 வயது தொடக்கம் 16 வயது வரையான மாணவர்களுக்கு நேற்று காலை முதல் பைசர் தடுப்பூசி ஏற்றப்பட்டது

இதன் போது 2,000க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி ஏற்றப்பட்டதுடன், இதன் போதே ஐந்து மாணவிகள் மயக்கமுற்ற நிலையில் வைத்தியசலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## சபையில் நிதியமைச்சர் தெளிவுபடுத்த வேண்டும்

இதுதொடர்பில், நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாராளுமன்றத்தில் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பிடகோட்டயிலுள்ள ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

நிதியமைச்சரின் இந்தக் கூற்று காரணமாக, சர்வதேச அமைப்புகளின் ஆதரவு அரசாங்கத்துக்கு கிடைக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது என்றும் கேள்வியெழுப்பினார். கறுப்புப் பணத்தை ஆயுதம் வாங்க ஏன் அரசாங்கம் பயன்படுத்தியது என்பதை பாராளுமன்றத்தில் விளக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

## இ.மி.சவின் பிரச்சினைகள் அதிகரிப்பு

ஊடகங்களுக்கு நேற்று (02) கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தாவது, நாடு மற்றும் இலங்கை மின்சார சபை போன்ற ஒரு நிறுவனமும் அவ்வாறான முறையில் இயங்க முடியாது எனவும் குறிப்பிட்டார்.

களனிதிஸ்ஸ அனல்மின் நிலையத்துக்கான எரிபொருள் கையிருப்பு இன்று காலைக்குள் தீர்ந்துவிடும் எனவும், சபுகஸ்கந்த அனல்மின் நிலையம் இன்றையதினம் இயங்க முடியாது எனவும் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் உள்ள நீர் மின் நிலையங்கள் கூட பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிட்ட அவர், தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை சமாளிக்க அமைச்சரவை அமைச்சர்களும் பாராளுமன்றமும் தவறிவிட்டதாக குற்றஞ்சுமத்தினார்.

நேற்றுமுன்தினம் (01) மின்வெட்டு அமல்படுத்தப்பட மாட்டாது என பொறுப்பான அமைச்சர், மின்சாரசபையின் பொது முகாமையாளர் மற்றும் அதிகாரிகள் கூறியிருந்த போதிலும் நேற்று முன்தினம் பிற்பகல் முதல் பல பிரதேசங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாக சுட்டிக்காட்டினார்.

## “ஶ்ரீ லங்காவின் சுதந்திர நாள் தமிழ்த் தேசத்தின் கரிநாள்”

தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரேழுச்சி இயக்க இணைப்பாளரும் சிவகுரு ஆதீன முதல்வருமான தவத்திரு வேலன் சுவாமிகள் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்க உப செயலாளர் இரதீஸ்வரன் சபிதா உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு அழைப்பு விடுத்தனர்

இதன்போது கருத்து தெரிவித்த வேலன் சுவாமிகள், “பெப்ரவரி 4 ஆம் நாள் ஶ்ரீ லங்காவின் சுதந்திர தினத்தினை முழுமையாக பகிஷ்கரித்து, அது தமிழர் தேசத்தின் கரிநாள் என்ற அடிப்படையில் தமிழர்களாக சுயர்நிர்ணயத்துக்காக போராடி வருகின்ற மக்களாக எதிர்ப்புகளை வெளிப்படுத்தி வருகின்றோம்.

இந்த ஆண்டு பெப்ரவரி நான்காம் திகதி காலை 10.00 மணிக்கு முள்ளிவாய்க்கால் முற்றத்தில் அனைத்து தமிழ் உறவுகளும் ஒன்றுகூடி, தமிழர் தேசத்தின் கரிநாள் என்ற தொனிப்பொருளில் எங்கள் உணர்வுகளையும் உரிமைக்கான குரலையும் எடுத்துக் காட்டவேண்டும்.

**எந்த இடத்தில் எங்கள் இன அழிப்பு நடைபெற்றதோ, எந்த இடத்தில் எங்கள் போராட்டம் மௌனிக்கப்பட்டதோ, அந்த இடத்தில் இருந்து நாங்கள் மீண்டும் எழுவோம் என்பதை இந்தப் போராட்டத்தில் நாங்கள் வெளிப்படுத்த விரும்புகின்றோம்**

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கம் தலைமையேற்று இப்போராட்டத்தை நடத்த இருக்கின்றார்கள்.

எங்கள் தாய்மார்கள் கடந்த 12 ஆண்டுகளாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்று நீதி கோரி போராடி வருகின்றார்கள்.

சிவில்அமைப்புகளாகிய நாங்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஆதரவு கொடுக்கவேண்டும்.

பாதிக்கப்பட்ட தரப்புகள், பொதுமக்கள், மதகுருமார்கள், சிவில் சமூகங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், மாதர் சங்கங்கள் சமூக மட்டத்தில் இருக்கும் அத்தனை பொது கட்டமைப்பும் இதற்கு ஆதரவு கொடுக்கவேண்டும் என்று அன்பாக வேண்டிநிற்கின்றோம். பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்குமான மக்கள் பேரெழிச்சி இயக்கமும் தன்னுடைய ஆதரவினை வெளிப்படுத்தி நிக்கின்றது.

ஈழத்தமிழர்கள் அனைவரும் எழுச்சி உற்று இன்று எங்கள் எதிர்பினை பதிவுசெய்யவேண்டிய தேவை உள்ளவர்களாக நாங்கள் இருக்கின்றோம். எந்த இடத்தில் எங்கள் இன அழிப்பு நடைபெற்றதோ, எந்த இடத்தில் கொத்துக்கொத்தாக மக்கள் உயிரிழந்தார்களோ, எந்த இடத்தில் எங்கள் போராட்டம் மௌனிக்கப்பட்டதோ, அந்த இடத்தில் இருந்து நாங்கள் மீண்டும் எழுவோம் என்பதை இந்தப் போராட்டத்தில் நாங்கள் வெளிப்படுத்த விரும்புகின்றோம்.

முள்ளிவாய்க்கால் மண் எங்கள் இனத்தின் பரிகார நீதிக்கான ஆரம்ப இடமாக அமைந்துள்ளது. எங்கள் உறவுகளை நாங்கள் கையளித்தோம்; அவர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரியவில்லை. நீதி கேட்டு எங்கள் தாய்மார்கள்

**பொதுமக்கள், மதகுருமார்கள், சிவில் சமூகங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், மாதர் சங்கங்கள் சமூக மட்டத்தில் இருக்கும் அத்தனை பொது கட்டமைப்பும் இதற்கு ஆதரவு கொடுக்கவேண்டும் என்று அன்பாக வேண்டி நிற்கின்றோம்**

நீண்டகாலமாகப் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். இதனைக் கருத்தில் கொண்டு, முள்ளிவாய்க்கால் முற்றத்தில் தொடங்கி வட்டுவாகல் பாலம் ஊடாக, முல்லைத்தீவு நகர் வரை பேரணியாக சென்றடையவுள்ளோம்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு அனைத்து தரப்பினரும் முழுமையான ஆதரவினை தரவேண்டும்.

எங்கள் தமிழ்த் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் என்ற கோட்பாடுகளை வைத்து இனஅழிப்பிற்கு பரிகார நீதியாக எங்கள் இனத்தினை நோக்கி ஒரு திசையில் பொதுசன வாக்கெடுப்பு என்ற நோக்கில் இந்த எழுச்சியினை வெளிக்கொண்டு வருகின்றோம். இதற்காக அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# 64 பேருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

கனகராசா சரவணன்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக, காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட ஷஹ்ரானின் பயிற்சி முகாமில் பயற்சி பெற்ற மற்றும் அவருடன் தொடர்பைப் பேணிவந்த 60 பேரையும் எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான், காணொளி மூலமாக நேற்று (02) புதன்கிழமை உத்தரவிட்டார்.

21.4.2019 உயிர்த்த ஞாயிறன்று இடம் பெற்ற தாக்குதலின் பின்னர், ஷஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் ஹம்பாந்தோட்டை, நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில், காத்தான்குடியை சேர்ந்த 65 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அதேவேளை, ஷஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், உட்பட 4 பேரை மட்டக்களப்பு பொலிஸார் கைது செய்தனர். இந்த இரு வெவ்வேறு வழக்குகளிலும் 69 பேர் தொடர்ந்து விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில், 5 பேர் வழக்கில் இருந்து முற்றாக விடுவிக்கப்பட்டனர். அதனையடுத்து, 64 பேர் பொலன்னறுவை, அநுராதபுரம், கேகாலை, திருகோணமலை போன்ற சிறைச்சாலைகளில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# ஒன்பது பேர் விடுதலை

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த 09 பேருக்கு கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டுள்ளது.

50 இலட்சம் ரூபாய் வீதமான இரண்டு சரீர பிணைகளில் இவர்கள் நேற்று முன்தினம் (01) விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த இவர்கள், கொழும்பு மெகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

"இவர்கள் பிணை கோரிக்கையை நிறைவேற்றாமையால், தொடர்ந்து மெகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்" என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

# விமலுக்கு எதிரான வழக்கின் சாட்சிய விசாரணை ஒத்திவைப்பு



அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட ஊழல் வழக்கின் சாட்சிய விசாரணைக்கான தினமாக எதிர்வரும் ஜூலை மாதம் 17ஆம் திகதியை மேல்நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க, நேற்று (02) அறிவித்தார்.

அமைச்சர் விமல் வீரவன்ச சார்பில் ஆஜராகும் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க சுகவீனம் காரணமாக மன்றில் ஆஜராக முடியாத காரணத்தால், சாட்சிய விசாரணைக்கு பிறிதொரு தினத்தை அறிவிக்குமாறு அவருடைய கனிஷ்ட சட்டத்தரணி கோரிநின்றார்.

அதற்கமைய ஜூலை மாதம் 17, 28ஆம் திகதிகளில் சாட்சிய விசாரணை நடைபெறும் என்று உத்தரவிட்ட நீதிபதி, அன்றைய தினம் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்குமாறும் உத்தரவிட்டார்.

அமைச்சராக பதவி வகித்து ஆறு வருட காலப்பகுதிக்குள் 75 மில்லியன் ரூபாய் பெறுமதியான சட்டவிரோத பணம், சொத்துகளை சேர்த்ததாக விமல் வீரவன்சவுக்கு எதிராக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், 39 குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

2009ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் அறிவிக்கப்படாத சொத்துகள் மூலம் அமைச்சர் இந்தக் குற்றத்தைச் செய்துள்ளதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தப் பணம், சொத்துகளை அமைச்சர் வீரவன்ச, இலஞ்சமாக பெற்றுக்கொண்டுள்ளார் என்றும் இலஞ்ச ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மேலும் குற்றம் சுமத்தியுள்ளார்.



லக்விஜயவில் மூன்றாவது மின் பிறப்பாக்கி

# சீர்செய்யப்பட்டது

நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட அவசர மின்தடை ஏற்பட்ட மூன்றாவது மின்பிறப்பாக்கி, மீண்டும் சீர்செய்யப்பட்டுள்ளதாக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

குறித்த மூன்றாவது மின்பிறப்பாக்கியை சீர்செய்யும் நடவடிக்கை நேற்று முன்தினம் (1) நள்ளிரவு 1மணியிலிருந்து நேற்று (2) பகல் 2 மணிவரை முன்னெடுக்கப்பட்டதுடன், இதன்மூலம் 180 மெகாவாட் மின் உற்பத்தியை தேசிய கட்டமைப்புக்கு வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்த மின் உற்பத்தி இயந்திரமானது, கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 3ஆம் திகதி திடீர் செயலிழந்ததாகவும் மீண்டும் இந்த வருடம் ஜனவரி 31ஆம் திகதி சீர்செய்யப்பட்டு, அடுத்த 24 மணிநேரத்துக்குள் மீண்டும் செயலிழந்துள்ளது.

எனினும் நேற்று முன்தினம் (1) மீண்டும் செயலிழந்த நிலையில், 24 மணிநேரத்துக்குள் மீண்டும் சீர்செய்ய மின்சார சபை பொறியியலாளர்கள் நடவடிக்கை எடுத்தனர் என்றார்.

இதுவரை நுரைச்சோலை லக்விஜய மின் உற்பத்தி நிலையத்தின் முதாவது மற்றும் இரண்டாவது கட்டமைப்பின் மின் உற்பத்தி இயந்திரம் மூலம் 600 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதுடன் மூன்றாவது இயந்திரம் மூலம் 180 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதாக தெரிவித்தார்.

ருவன் சமிலவின்

# 2 சொகுசு வீடுகளுக்கு சீல்

ஹெரோய்ன், ஐஸ் உள்ளிட்ட பெருந்தொகை போதைப்பொருள் கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடைய 'தெமட்டகொட ருவன்' என அழைக்கப்படும் ருவன் சமில பிரசன்னவுக்கு சொந்தமான இரண்டு சொகுசு வீடுகளுக்கு சீல் வைப்பதற்கான உத்தரவு பெறப்பட்டுள்ளது.

சட்டவிரோத சொத்துகள் அல்லது சொத்து விசாரணைப் பிரிவு இதற்கான தடையை பெற்றுள்ளது.

குற்றம், போதைப்பொருள் கடத்தல் மூலம் சம்பாதித்த பணத்தைக் கொண்டு, இந்த இரண்டு சொகுசு வீடுகளையும் தனது மனைவியின் பெயரில் தெமட்டகொட ருவன் வாங்கியுள்ளார்.

இந்த வீடுகள் இரண்டும் ரூ. 3 கோடியே 46 இலட்சத்துக்கும் மேல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் கூறுகின்றனர்.

# 500 மில். டொலர் ஒப்பந்தம் கைச்சாத்து



இந்திய எக்சிம் வங்கி, நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் முன்னிலையில் இலங்கை திறைசேரியுடன் பெற்றோலிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

# தம்பபவனி'ஐ பார்வையிடார் ஜனாதிபதி

இலங்கை மின்சார சபைக்கு உரித்தான மன்னார் "தம்பபவனி" காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்துக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நேற்று (02) முற்பகல் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.

மின்சாரத்தால் நாட்டை பலப்படுத்துதல், நிலையான மின் விநியோகம் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களைத் துரிதப்படுத்துதல் போன்ற நோக்கங்களின் அடிப்படையில், 2014ஆம் ஆண்டில் இந்த "தம்பபவனி" காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன.

இரண்டு பெரிய பருவக் காற்றுகளையும் எதிர்கொள்ளும் மன்னார் தீவின் தெற்குக் கடற்கரைப் பிரதேசத்தில், 13 கிலோமீற்றர் நீளம் மற்றும் 150 ஹெக்டெயார் நிலப்பரப்பு, இதற்காகத் தெரிவு செய்யப்பட்டது.

90 மீற்றர் உயரத்திலான விசையாழிகளுடன் கூடிய முப்பது கோபுரங்களை இந்த மின்னுற்பத்தி நிலையம் கொண்டுள்ளது. சுழலும் கத்திகளின் (காற்றாலைகள்) விட்டம் 126 ஆறு மீற்றர் ஆகும். ஒரு கோபுரத்திலிருந்து 3.45 மெகாவொட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. நடுக்குடா பசுமை உதவி நிலையம் மற்றும் மன்னார் - புதுக்காமம் வரையான 36 கிலோமீற்றர் நீளத்துக்கு, இதன் ட்ரான்ஸ்மிஷன் கட்டமைப்பு அமைந்துள்ளது.

இந்நிலையத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மொத்த மின்னுற்பத்தியின் அளவு 103.5 மெகாவொட்கள் ஆகும். இங்கு ஓர் அலகு மின்னுற்பத்தியை மேற்கொள்ள, 8 ரூபாய்க்கும் குறைவான தொகையே செலவாகின்றது என, இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இ.தே.தோ.தொழிலாளர் சங்கத்தின்

# சொத்துகளை கொள்ளையடிக்க இடமளியேன்

வடிவேல் சுரேஸ் எம்.பி காட்டம்



தான் உயிரோடு இருக்கும்வரை இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் காரியாலயம், சொத்துகளை கொள்ளையடிப்பதற்கு இடமளிக்க மாட்டேன் என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்

ராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்: இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைமை காரியாலயத்தையும் அதற்கு உரித்தான சொத்துகளையும் கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் இதற்கு முன்னரும் ஒரு சிலர் காரியாலயத்துக்குள் அத்துமீறி நுழைந்து, இங்குள்ள பொருட்களுக்கு சேதத்தை ஏற்படுத்திச் சென்றார்கள்.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்தும் இதுவரை எவ்விதமான சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில், கடந்த வாரமும் ஒரு சிலர் அத்துமீறி சங்கத்துக்குள் நுழைந்து சங்கத்தின் உத்தியோகஸ்தர்களுக்கு பாதிப்பு ஏற்படும் வண்ணம் செயற்பட்டிருக்கிறார்கள்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும் நிலையில், சங்கத்தின் யாப்பின் பிரகாரம் நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளலாம் என்ற தீர்ப்புக்கு அமைய நாம் சங்கத்தின் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

சங்கத்தின் சொத்துகளைச் சூறையாடும் நோக்கில் நயவஞ்சக செயற்பாடுகளில் ஒருசிலர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

எது எவ்வாறாக இருந்தபோதிலும், மலையக பெருந்தோட்ட மக்களுக்கு சொந்தமான இந்த இடத்தையும் காணியையும் அவர்களுடைய உரிமைகளையும் கொள்ளையடிக்கும் நோக்கத்துன் செயற்படுகின்ற எந்த ஒரு கூட்டத்திற்கும் நான் உயிரோடு இருக்கும் வரை அனுமதிக்கப் போவதில்லை என்றார்.

இலங்கையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு ஐந்து வருடங்கள் நிறைவடைந்துள்ளன

உங்களுக்கு தெரியுமா?

01 தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவது பொது அதிகாரசபைகளின் பொறுப்பாகும்

02 மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண தகவலறியும் உரிமைச் சட்டம் உதவுகிறது

03 தகவல் அறியும் உரிமைச் சட்டம் பொது அதிகாரசபைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை அதிகரிக்க உதவுகிறது

04 இலஞ்சம் மற்றும் ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தலாம்

05 தகவலறியும் உரிமைச் சட்டம் என்பது நாட்டின் ஆட்சிமுறையில் பங்கேற்க ஒரு சிறந்த மூலமாகும்

தகவல் அறியும் உரிமை பிரஜைகளின் உரிமை

உங்களின் தகவல் அறியும் உரிமையைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள எங்களைத் தொடர்பு கொள்ளவும்

தொடர்புகட்கு,

070 3300 700



இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்,
இல.96, கிருல வீதி, கொழும்பு 05.

தொலைபேசி:011-5353635
தொலைநகல் : 0115353500
மின்னஞ்சல்: rti@slpi.lk / info@slpi.lk
வலைத்தளம்: www.slpi.lk/ www.rtisrilanka.lk

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

RTI SRI LANKA

# மர்மமான முறையில் கரை ஒதுங்கிய இலங்கை படகு

## உளவுத்துறை தீவிர விசாரணை

■ ஹொசேரியன் லம்பேட்

மன்னார் வளைகுடா கடல் பிராந்தியம் அருகே இரண்டாம் மணல் திட்டில் கரை ஒதுங்கிய இலங்கை மர்ம படகு குறித்து உளவுத்துறை கடலோர காவல் படையினர் உள்ளிட்ட பாதுகாப்பு படையினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தனுஷ்கோடி அருகே இரண்டாம் மணல் திட்டில் இலங்கை கண்ணாடி இழைப் படகு, கரை ஒதுங்கியுள்ளதாக நேற்று முன்தினம் (01) இரவு தனுஷ்கோடி பகுதி நாட்டுப்படகு மீனவர்கள் கரையோரப் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். இதையடுத்து அங்கு சென்ற கரையோரப் பொலிஸார், உளவுத்துறை மற்றும் சுங்கத் துறையினர் படகை மீட்டு இரவு கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தனர்.

மீட்கப்பட்ட பைபர் படகு இலங்கை புத்தளம் பகுதியைச் சேர்ந்த 22 அடி நீளமும் 3 அடி அகலமும் கொண்ட வெள்ளை மற்றும் சிவப்பு நிறத்தில் இருந்துள்ளது.

படகில் யாரேனும் ஊடுருவினார்களா? அல்லது கடத்தலுக்கு பயன்படுத்த வந்ததா? அல்லது காற்றின் சீற்றத்தில் கரை ஒதுங்கியுள்ளதா? என்பது குறித்து பாதுகாப்பு படையினர் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

படகில் இயந்திரம் பொருத்தப்படும் இடம் சேதமடைந்தும், படகில் மீன்பிடி உபகரணங்கள் இல்லாமல் இருந்ததாக தெரிவித்த பாதுகாப்பு அதிகாரிகள் மீட்கப்பட்ட படகை சுங்க துறையினரிடம் ஒப்படைத்தனர்.

மர்ம படகு குறித்து இலங்கை பாதுகாப்பு படையினரிடம் விசாரிக்கும் போது, படகின் பதிவு எண் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்தது என்றும் படகு காணாமல் போனதாக இதுவரை எந்த புகாரும் அளிக்கவில்லை எனவும் இதுகுறித்து விசாரிப்பதாகவும் தெரிவித்துள்ளதாக தகவல் தெரிவித்துள்ளனர்.

ஊறணி விபத்தில்

# பெண் படுகாயம்; சாரதி கைது

■ கனகராசா சரவணன்



மட்டக்களப்பு-கொழும்பு வீதி ஊறணி சந்தியில் மோட்டார் சைக்கிளும் கோழிகளை ஏற்றிச் சென்ற கன்ரர் ரக வாகனமும் மோதிய விபத்தில் மோட்டர் சைக்கிளை செலுத்திச் சென்ற பெண், படுகாயமடைந்துள்ளார். கோழிகளை ஏற்றிச்சென்ற வாகனமும் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இன்று புதன்கிழமை (02) அதிகாலையில் இடம்பெற்ற சம்பவத்தில், படுகாயமடைந்த பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் சாரதியை கைது செய்துள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்தனர். வாழைச்சேனை பகுதியில் இருந்து காத்தான்குடி பிரதேசத்தை நோக்கி கோழிகளை ஏற்றிக் கொண்டு பயணித்த கன்ரர், மட்டக்களப்பில் இருந்து ஊறணிக்கு சென்ற மோட்டார் சைக்கிளும், ஊறணி சந்தியில் வைத்து மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

வாகனத்தின் சாரதியை கைது செய்துள்ள மட்டு. தலைமையக போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பலாலியில்

# வெடிக்காத நிலையில் குண்டு மீட்பு



■ எஸ். நிதர்ஷன்

பலாலிப் பகுதியில் வெற்றுக் காணியில் வெடிகுண்டு ஒன்று விசேட அதிரடிப் படையினரால் நேற்று முன்தினம் (01) மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது: குறித்த காணியில் சந்தேகத்துக்கிடமான பொருள் இருப்பது அவதானிக்கப்பட்ட நிலையில், குறித்த விடயம் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசேட அதிரடிப் படையினருக்கு தகவல் வழங்கப்பட்டதை தொடர்ந்து குண்டு மீட்கப்பட்டது.

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட

# வாகனங்களை கைப்பற்றிய பொலிஸார்

■ சுப்ரமணியம் பாஸ்கரன்

அண்மைக்காலமாக சட்டவிரோத செயல்கள் அதிகரித்துள்ள நிலையில், அதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையின் கீழ், சட்ட விரோத செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஓர் சிறப்பு பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய நேற்று (02) மேற்கொண்ட நடவடிக்கைகள் முரசுமோட்டை, ஊரியான் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 3 டிப்பர் வாகனங்களும், அதன் ஒட்டுநரும் தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தவிர, பிரமந்தனாறு, மயில்வாகனபுரம் பகுதியில் அனுமதிப்பத்திரத்துக்கு முரணான வகையில் ஆற்றுப் பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு உழவு இயந்திரங்களும், அதன் ஓட்டுநரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று, சந்தேகநபர்களை இன்று நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காதல் விவகாரத்தில்

# கோண்டாவிலில் வீடு புகுந்து தாக்குதல்

## மூன்று பேர் கைது



யாழ்ப்பாணம், கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது தாக்குதல் நடத்தியவர்களை விரைந்து செயற்பட்ட கோப்பாய் பொலிஸார் மூவரைக் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, மோட்டார் சைக்கிளில் வந்த குழு ஒன்று கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொனறில் மீது அத்துமீறி நுழைந்து தாக்குதலை நடத்தியது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து சி.சி.டி.வி காட்சிகளை அடிப்படையாக வைத்து விரைந்து செயற்பட்ட கோப்பாய் பொலிஸர் சந்தேகநபர்களை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் குறித்த சம்பவம் காதல் விவகாரம் காரணமாக இடம்பெற்றுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ள நிலையில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவில்

# ஒரு கிலோ கிராம் நெல் 92 ரூபாய்க்கு கொள்வனவு

■ கெ. கீதாஞ்சன்

விவசாய அமைச்சின் நெல் சந்தைப்படுத்தல் சபையானது, முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளிடம் இருந்து காய்ந்த நெல்லை தரமான விலைக்கு கொள்வனவு செய்யவுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் உதவி பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

நேற்று (02) தொடக்கம் மாவட்டத்தில் உள்ள நெல் களஞ்சியங்களில் நெல் கொள்வனவு செய்யப்பட்டது.

அந்தவகையில் சிவப்பு நாடு, வெள்ளைநாடு 90 ரூபாயாகவும், ஏற்றுக்கூலி இரண்டு ரூபாயாகவும் மொத்தம் 92 ரூபாயாகவும் கொள்வனவு செய்யப்பட்டதுடன், சம்பா நெல்லு 92 ரூபாயாகவும், ஏற்றுக்கூலி 2 ரூபாயாகவும், 94 ரூபாயாகவும் கொள்வனவு செய்யப்பட்டது. கீரிச்சம்பா 95 ரூபாயாகவும், ஏற்றுக்கூலி இரண்டு ரூபாயாகவும், 97 ரூபாயாகவும் கொள்வனவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நெல் பை ஒன்று 40 ரூபாவாகவும், காய்ந்த நெல்லின் ஈரத்தன்மை 14 சதவீதத்துக்கு குறைவாகவும், சம்பி 9 சதவீதத்துக்கு குறைவானதாகவும் இருக்கவேண்டும் என்பதுடன் முள்ளியவளை, தண்ணீரூற்று, குமுழமுனை, முறிப்பு பகுதிகளில் உள்ள நெல் சந்தைப்படுத்தல் களஞ்சியங்களில் விவசாயிகள் நெல்லை உரிய முறையில் கொடுக்கலாம் என்றும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் உதவி பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

# கர்ப்பிணி பெண் கொலை: பிரதான சந்தேக நபர் கைது

■ செந்தூரன் பிரதீபன்

ஊர்காவற்துறை பிரதேசத்தை நடுங்க வைத்த கர்ப்பிணி பெண் கொலைச் சம்பவம் தொடர்பில், பிரதான சந்தேகநபர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு கரம்பன் பகுதியில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில், கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து இருந்தனர்.

பிரதான சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு இருக்கவில்லை. இந்நிலையில் நெடுந்தீவு பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டு, நேற்று (02) ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தின் முற்படுத்தியபோது, அவரை எதிர்வரும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவினை ஊர்காவற்துறை நீதிமன்ற நீதவான் ஜெ. கஜநிதிபாலன் பிறப்பித்தார்.

# அப்துல் ஜவாத் காலமானார்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்



காத்தான்குடி நகர சபை முன்னாள் தலைவரும் காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஆயுட்கால பிரதி தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான ஏ.எல்.அப்துல் ஜவாத், சுகவீனமுற்றிருந்த நிலையில் நேற்று (02) காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 82 ஆகும்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக தலைவர்களில் ஒருவரான இவர், சிரேஷ்ட சமூக சேவையாளராவார். காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தை ஸ்தாபிப்பதிலும் இவர் முன்னின்று உழைத்துள்ளதுடன் அதன் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மக்களே விழிப்பாக இருங்கள்

■ கனகராசா சரவணன்




மட்டக்களப்பு மாவட்டத்தில் சமூகத்துக்கு மத்தியில் கொரோனாவின் புதிய தொற்றான ஒமிக்ரோன் தாக்கம் அதிகரித்துள்ளது. ஆகையால், அதனை உணர்ந்து மக்கள் செயற்படவேண்டுமென கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப் பத்மநாபா மன்ற தலைவருமான இரா. துரைரெத்தினம் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஒமிக்ரோன் தாக்கம் அதிகரித்துள்ளது. மூன்று தடுப்பூசிகளையும் செலுத்தியவர்களில் ஒரு சிலருக்குத் தொற்றுகாய்ச்சலும் மூன்று தடுப்பூசிகளையும் செலுத்தாதவர்களுக்குக் காய்ச்சல் ஏற்பட்டுவருவதாகவும் அறியமுடிகின்றது.


ஆபத்தான கொரோனா ஒமிக்ரோன் என சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ள நிலையில், சமூகத்தில் உள்ளவர்களின் மீறல்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து உரிய தரப்பினர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வெண்டும்.

மங்களகரமான நிகழ்ச்சிகள், புனித ஸ்தலங்களில் நடைபெறும் நிகழ்வுகள், துக்ககரமான சம்பவங்கள், அனாவசிய ஒன்று கூடல்கள், போக்குவரத்து ஏனைய அத்தியாவசியத் தேவைக்கான செயற்பாடுகள், தொழில் கடமைகள், நாளாந்த தொழில் செயற்பாடுகள் போன்றவற்றை கட்டுப்படுத்தியே ஆக வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

ஒமிக்ரோன் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கணிசமான வறுமையும் பொருளாதார பின்னடைவும் ஏற்பட்டதை எவராலும் மறுதழிக்க முடியாது. அதனை குறிப்பிட்ட வருடத்திற்குள் ஈடு செய்யவும் முடியாது என்றார்.

# சிறுவனை காணவில்லை

■ கனகராசா சரவணன்



மட்டக்களப்பு, சந்திவெளி பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதான தனது மகனைக் காணவில்லையென அவருடைய பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர் என சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

சந்திவெளி பத்தினி அம்மன் கோவில் வீதி, ஜீவபுரத்தைச் சேர்ந்த அன்ரனி ஆநுராஸ் என்ற சிறுவனே, ஜனவரி 28ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார். அலைபேசியின் மேல் உறைக்குள் வைத்திருந்த இரண்டாயிரம் ரூபாய் பணத்தையும் காணவில்லை என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறுவன் பற்றிய தகவல்கள் தெரிந்தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொண்ட சந்திவெளி பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# நேற்று முதல் நெல் கொள்வனவு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அம்பாறை மாவட்ட விவசாயிகளிடமிருந்து பெரும் போக நெல்லை, அரசாங்க உத்தரவாத விலைக்கு நேற்று (02) புதன்கிழமை முதல் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது என நெல் சந்தைப்படுத்தும் சபையின் அம்பாறைப் பிராந்திய முகாமையாளர் டபிள்யூ.ஆர்.ஏ. சாந்த குமார தெரிவித்தார். சம்பா 1 கிலோ கிராம் 92 ரூபாயும், நாடு நெல் 01 கிலோ கிராம் 90 ரூபாவுக்கும், கீரிச் சம்பா நெல் 01 கிலோ கிராம் 95 ரூபாவுக்கும் அரசாங்க உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டு வருவதாகவும், போக்குவரத்து கூலி ஒரு கிலோ கிராமுக்கு 02 ரூபாய் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

# அமைச்சு செயலாளர்கள் திடீர் மாற்றம்



■ சகா

கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்களிடையே கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா ஜகம்பத் அதிரடியாக மாற்றத்தைச் செய்துள்ளார்.

அதற்கான இடமாற்ற கடிதங்கள் கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யகம்பத்தால் நேற்று முன்தினம் (01) வழங்கி வைக்கப்பட்டது. இதன்போது ஆளுநரின் செயலாளர் டபிள்யூ. மதன்நாயக்காவும் உடனிருந்தார்.

இதனடிப்படையில் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராக திருமதி கலாமதி பத்மராஜா, மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளராக கலாநிதி எம். கோபாலரத்னம், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக திருமதி

> முக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்களிடையே கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா ஜகம்பத் அதிரடியாக மாற்றத்தைச் செய்துள்ளார்

ஜே.ஜே.முரளிதரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக எச்.ஈ.எம். டபிள்யூ.ஜீ.திஸாநாயக்காவும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக ஐ.கே.ஜீ. முத்துபண்டாவும் கிழக்கு மாகாண பேரவையின் செயலாளராக எம். வை.சலீமும் வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக ஏ.எச்.எம்.அன்ஸாரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், மாகாண பிரதம செயலாளர் பதவி தொடர்ந்து வெற்றிடமாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

பத்தனை ஸ்ரீபாத கல்வியற் கல்லூரியில்

# தொற்றின் வேகம் அதிகரிப்பு

## இருதரப்பும் பரஸ்பரம் குற்றச்சாட்டு

■ டி.ஷங்கீதன்

கல்வி அமைச்சின் அறிவித்தலின்படி கடந்த மாதம் 17 ஆம் திகதி முதல் திறக்கப்பட்ட பத்தனை ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரியின் ஆசிரிய மாணவர்கள் பலர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

அன்டிஜன் பரிசோதனை மூலம் இந்த மாணவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டாலும் அவர்களுக்கான தனிமைப்படுத்தல் நிலையமோ அல்லது, தேவையான நடவடிக்கைகளோ நிர்வாகத்தால் மேற்கொள்ளப்படவில்லை என ஆசிரிய மாணவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

காய்ச்சல் உட்பட தொற்றுக்கு ஆளானவர்கள் அனைவரும் ஒரே பகுதியிலேயே தங்க வைக்கப்பட்டதாகவும் தங்களுக்கு உரிய பாதுகாப்பு இல்லை என்ற காரணத்தைத் தெரிவித்து ஒருசில மாணவர்கள் கல்லூரியில் இருந்து வெளியேறி வீடுகளுக்கு சென்றுவிட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.




இந்த விடயம் தொடர்பில் கல்லூரியின் தலைவர் கு. துரைராஜசிங்கத்திடம் நேற்று (02) தொலைபேசியில் தொடர்பு கொண்டு வினவியபோது, கல்லூரியில் தொற்று வேகமாகப் பரவிவருவதாகவும் இது தொடர்பாக கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரியினருக்கு அறிவித்த போதிலும் அவர்கள் தங்களுக்கு உரிய ஒத்துழைப்பை வழங்கவில்லை என்றும் அத்துடன் மாணவர்கள் அநேகமானவர்கள் தங்களுடைய சுய விருப்பத்தின் பேரில் கல்லூரியில் இருந்து வெளியேறுவதாகவும் வெளியேறுகின்ற மாணவர்களை தடுத்து நிறுத்த முடியாத நிலையே காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி கனகசபாபதி சுதர்சனிடம் வினவிய போது, குறித்த கல்லூரியில் இந்தத் தொற்று அதிகரிப்பதற்கு முக்கிய காரணம் கல்லூரியில் பொங்கல விழா ஏற்பாடு செய்யப்பட்டமையாகும். அதைச் செய்ய வேண்டாமென நாங்கள் நிர்வாகத்துக்கு அறிவித்திருந்தோம். அதனை பொருட்படுத்தாது செய்ததன் காரணமாகவே இத்தொற்று அதிகரித்துள்ளது.

விரிவுரையாளர்களே, அதிகமாக தொற்றுக்கு உள்ளாகிவருகின்றனர். ஆகையால், தற்போதுள்ள சுகாதார விதிமுறைகளின்படி, கல்லூரியை மூடுவதற்குத் தங்களுக்கு அதிகாரம் இல்லை என்றார்.

எங்களுடைய சுகாதார வழிகாட்டல் முறைகளையும் எங்களுடைய ஆலோசனைகளையும் முறையாகப் பின்பற்றாவிட்டால் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.



## அமர்ந்திருந்தவாறே ஒருவர் மரணம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் ஞாயிறு சந்தைப் பகுதியில் , கதிரையில் அமர்ந்திருந்தவாறே உயிரிழந்த வியாபாரி ஒருவரின் சடலம் நேற்று (2) காலை மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் ஹட்டன் ஞாயிறு சந்தையில் பல வருடங்களாக வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த 68 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தனது வியாபார நடவடிக்கைகள் நிறைவடைந்ததும், அந்த வர்த்தக நிலையத்திலேயே இரவு அவர் தங்கி விடுவதாகவும் நேற்று (02) காலை அவரது வர்த்தக நிலையம் திறக்கப்படாமையை அவதானித்த அயல் வர்த்தக நிலையத்தின் உரிமையாளர்கள், சம்பந்தப்பட்டவரின் வர்த்தக நிலையத்தை திறந்து பார்த்த போதே, அவர் கதிரையில் அமர்ந்திருந்தவாறே உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஹட்டன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



பொகவந்தலாவை பிரதேச மாணவர்கள்

## ஆர்வத்துடன் வருகை தந்தனர்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

பொகவந்தலாவை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 12 வயது தொடக்கம் 16 வயதுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான முதலாவது தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நேற்று (2) பொகவந்தலாவை சென்.மேரிஸ் கல்லூரியில் இடம்பெற்றது.

இதன்போது, சென்மேரீஸ், தர்மகீர்த்தி தேசிய பாடசாலை, ஹொலிரோசரி தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 2,000 மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இதன்போது மாணவர்கள் ஈடுபாட்டுடன் தடுப்பூசி செலுத்திக்கொள்ள முன்வந்தமை குறிப்பிடத்தக்கது.




டியன்சின் தொழிலாளர்கள்

## சங்கு ஊதி, ஒப்பாரி வைத்து ஆர்ப்பாட்டம்

■ எஸ். சதீஸ்

பொகவந்தலாவை டியன்சின் தோட்டத் தொழிலாளர்கள் இரண்டாவது நாளாகவும் தொழிலுக்குச் செல்லாது, நேற்று (02) ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

ஹட்டன்-பொகவந்தலாவை பிரதான வீதியின் டியன்சின் சந்தியில் சங்கு ஊதி, ஒப்பாரி வைத்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொழிளர்கள், பச்சை தேயிலை கொழுந்தினை நிறுவை செய்வதற்கு, டிஜிட்டல் தராசினை பயன்படுத்துமாறு தொழிலாளர்களை தோட்ட நிர்வாகம் வற்புறுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்தே, இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் (01) பொகவந்தலாவை பெருந்தோட்ட நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியோடு கலந்துரையாடல் இடம்பெற்றது. அதன்போது தோட்ட முகாமையாளர் தொழிலாளர்களை தகாதவார்தைகளால் பேசியுள்ளார்.

எனவே, இதற்காக முகாமையாளர் மற்றும் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோர் தம்மிடம் மன்னிப்பு கோர வேண்டும் அல்லது எமது தோட்டத்தை விட்டு தோட்டமுகாமையாளர் வெளியேற வேண்டும் என வலியுறுத்தியும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.



## பிரியாவிடையும் நூல் வெளியீடும்

■ நடராஜா மலர்வேந்தன்

தேசிய கல்வி நிறுவகம் ஆசிரியர்களின் வாண்மைத்துவ விருத்தியை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளும் கல்விமாணி கற்கைநெறியின் பதுளை நிலைய 2017 - 2020 தொகுதி கற்கை நெறி ஆசிரியர் மாணவர்களால் பிரியாவிடை நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜனவரி மாதம் 31ஆம் திகதி பதுளை கெப்பிட்டல் சிடி ஹோட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில், ‘நினைவேட்டில் தாரகைகள்’ எனும் நூல் வெளியீட்டு நிகழ்வும் நடைபெற்றது. கல்விமாணி கற்கைநெறி பேரவையின் தலைவர் எஸ். வசந்தகுமார் தலைமையில் இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

டெங்கு பரவுவதைத் தடுக்க

## நுவரெலியாவில் சிரமதானப் பணி

■ ஆ.ரமேஸ்

நுவரெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் டெங்கு பரவுவதைத்தடுப்பதற்கான சிரமதானப் பணிகளை நுவரெலியா பிரதேச சபை முன்னெடுத்து வருகிறது.

நுவரெலியா பிரதேச சபையின் தவிசாளர் வேலு யோகராஜியின் கண்காணிப்பின் கீழ், “சுத்தமான சூழலை உருவாக்குவோம்” எனும் தொனியில் இந்தச் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டு வருகிறது.



இதற்கமைய, மீபிலிமான தொடக்கம் கந்தேஎல, அம்பேவல, பட்டிபொல, கந்தப்பளை, நானுஓயா, பொரலந்த, ஹக்கல ஆகிய பிரதேசங்களில் குறித்த சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நடைபாதையை புனரமைக்க

## உதயகுமார் எம்.பி நிதியுதவி

தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமாரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில், டிக்கோயா லெதன்டி தோட்ட புரடெக் (மந்திதோட்டம்) பிரிவில் நடைபாதையொன்று புனரமைக்கப்பட்டுள்ளது.

மயில்வாகனம் உதயகுமாரின் இரண்டு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இந்த நடைபாதை புனரமைக்கப்பட்டுள்ளது.

நோர்வூட் பிரதேசசபையின் உறுப்பினரும் சமர்வில் வட்டார பொறுப்பாளருமான இராமச்சந்திரன், தொழிலாளர் தேசிய சங்கத்தின் நோட்டன் பிரதேச அமைப்பாளர் நந்தகோபால் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க, இந்த நடைபாதையை தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி நிதிச் செயலாளரும் மத்திய மாகாணசபையின் முன்னாள் உறுப்பினருமான சோ. ஸ்ரீதரன் நேரில் சென்று பார்வையிட்டார்.



7 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் பசறை பிரதேச சபையில்

## தமிழ் மொழி புறக்கணிப்பு

■ ராமு தனராஜா

பசறை பிரதேச சபை ஊடாக முன்னெடுக்கப்படும் ‘ஒலிபரப்பு அறிவுறுத்தல்கள்’ அனைத்தும் சிங்கள மொழியில் மட்டும் முன்னெடுக்கப்படுவதால், தமிழ் பேசும் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

பசறை பிரதேச சபையில் 07 தமிழ் பேசும் பிரதிநிதிகள் காணப்படும் அதேவேளை, 52 சதவீதமான தமிழ்மொழி பேசும் மக்களும் வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில், தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு வருவதாக குற்றஞ்சுமத்தப்படுகின்றது. பிரதேச சபையால் பசறை பிரதேசத்தில் நடத்தப்படும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள், அவசரமாக மேற்கொள்ளப்படும் ஒலிபரப்புகள் அனைத்துமே, தனிச்சிங்கள மொழியிலேயே காணப்படுவதாக குற்றஞ்சுமத்துகின்றனர்.

பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் தமிழ் பேசும் உறுப்பினர்களிடம் இது குறித்து, பிரதேச சபை அமர்வில் முன்வைக்குமாறு கூறினாலும், பிரதிநிதிகள் எவ்வித நடவடிக்கையும் முன்னெடுப்பதில்லை என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

பிரதேச செயலக விடயத்தில்

## துணை போகிறது ஒரு தரப்பு



நுவரெலியா மாவட்ட பிரதேச செயலக அதிகரிப்பு விடயத்தில் காட்டப்படும் பாரபட்சத்துக்கு துணைபோகும் தரப்பாக ஒரு தரப்பும், அதனை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு அரசியல் ரீதியாக முன்கொண்டு செல்லாதவர்களாக மற்றொரு தரப்பும் செயற்படும் நிலைமையையே மலையகத்தில் காணமுடிகிறது என நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான மயில்வாகனம் திலகராஜ் தெரிவத்துள்ளார்.

இந்த நிலையில் அத்துமீறும் தரப்புக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளுக்கும் மலையக அரசியல் அரங்கம், தலைமைகொடுத்து முன்செல்லும் எனவும், பிரதேச செயலக விடயத்தில் மாவட்ட மக்களின் மனித உரிமை மீறப்பட்டதாக வலியுறுத்தி, மலையக அரசியல் அரங்கத்தின் சார்பில் முறைப்பாடு ஒன்றினைப் பதிவு செய்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்; நுவரெலிய மாவட்ட பிரதேச செயலக அதிகரிப்பு விடயத்தினை கையில் எடுத்து எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் செய்ய வேண்டிய பணிகளை, மலையக அரசியல் அரங்கம் முன்கொண்டு செல்கிறது.

முதற்கட்டமாக, நுவரெலியா மாவட்டம் முழுவதுமாக கையெழுத்து இயக்கத்தை நடத்தி, மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன், மக்களிடம் சேகரிக்கப்பட்ட கையெழுத்து மனுவை மாவட்டச் செயலாளர் ஊடாக ஜனாதிபதி, பிரதமர், துறைசார் அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளோம்.

அடுத்த கட்டமாக, அந்த மனு குறித்த விவரங்களுடன் மாவட்டத்தின் பிரஜைகள் என்ற வகையிலும் மலையக அரசியல் அரங்கத்தின் சார்பிலும் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாட்டினைப் பதிவு செய்துள்ளோம்.

எனினும், அரசியல் ரீதியாக பாரபட்சம் காட்டப்படும் இந்த விடயத்தினை அரசியல் ரீதியாகவே அணுகி வென்றெடுக்க வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம் என்றார்.

# அறிகுறி தென்படின் வீடுகளுக்குள்ளே முடங்காது வைத்தியரை நாடுங்கள்

வீட்டுக்குள் முடங்கியிருந்த காலம் மலையேறிவிட, வீட்டுக்குள்ளே முடங்கிக் கிடக்காது வைத்தியரை நாடவேண்டுமென அறிவுரை வழங்கவேண்டிய காலத்துக்குள் நாமெல்லாம் நிற்கின்றோம்.

நமது நாட்டைப் பொறுத்தமட்டில், ஒமிக்ரோன் தொற்றாளர்கள் சிலர், ஆங்காங்கே அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஒமிக்ரோன் தொற்று, பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது. எனினும், மூன்றாவது தடுப்பூசியை செலுத்திக்கொள்வது உசிதமானதென சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர்.

தடுப்பூசிகளை செலுத்தும் செயற்பாடுகள் துரித்தப்படுத்தப்பட்டாலும், தடுப்பூசி மீதான அச்சம் இன்னும் முழுமையாகக் களையப்படவில்லை. முதலாவது தடுப்பூசிக்கு ஓரளவுக்கு அச்சம் கொண்டிருந்தவர்கள், இரண்டாவது தடுப்பூசி எப்போது செலுத்தப்படவேண்டுமெனக் காத்திருந்தனர். ஆனால், மூன்றாவது தடுப்பூசியின் மீது பேரச்சம் கொண்டுள்ளனர்.

இந்நிலையில், முதலாவது தடுப்பூசியை செலுத்திக்கொண்ட மாணவர்களில் சிலர், மயக்கமுற்ற சம்பவமும் பொகவந்தலாவையில் இடம்பெற்றுள்ளது. மூன்றாவது தடுப்பூசியை செலுத்திக்கொள்வதற்காகப் பலமணிநேரம் கால்கடுக்கக் காத்திருந்த முதியோர்களில் சிலர், தடுப்பூசியை செலுத்திக்கொள்ளாமலே வீடுகளுக்குத் திரும்பிவிட்ட சம்பவம் ஹட்டனில் இடம்பெற்றுள்ளது.

மூன்றாவது தடுப்பூசியை செலுத்திக்கொண்டவர்களில் பலரும், முன்பிருந்ததைப் போல, தங்களால் சுறுசுறுப்பாக இயங்கமுடியவில்லை; ஏதோவொரு சோர்வு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இவையெல்லாம், அடுத்தடுத்த தடுப்பூசியை செலுத்திக்கொள்வோருக்கு ஒருவகையான மனப்பயத்தை ஏற்படுத்திவிடும்.

இதற்கிடையில், நாடளாவிய ரீதியில் பரவிக்கொண்டிருக்கும் ஒருவகையான வைரஸால், பலரும் உடற் சோர்வுற்ற நிலையில் களைத்து இருக்கின்றனர். சிலர், தொடர்ச்சியாக இருமிக்கொண்டும், தும்மிக்கொண்டும் இருக்கின்றனர்.

தற்போது பரவிக்கொண்டிருக்கும் வைரஸ் காய்ச்சல், வயது வித்தியாசம் இன்றி, சகலரிடத்திலும் தொற்றி வாட்டிக்கொண்டிருக்கின்றது. ஆகையால், அவ்வாறான அறிகுறிகள் தென்படுவோர், வீடுகளுக்கு உள்ளேயே முடங்கிக்கிடக்காமல் வைத்தியரை நாடி, உரிய சிகிச்சைகளை உடனடியாகப் பெற்றுக்கொள்வதே உசிதமானது.

கொரோனாவுக்குப் பின்னரான ஒவ்வொரு நோய்நொடிகளையும் கணக்கிலெடுக்காது விட்டுவிடக்கூடாது. எனினும், ஒமிக்ரோன் அலை, பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாதென விடயதானத்துக்குப் பொறுப்பானவர்கள் கூறியிருக்கின்றனர். இது மனப்பயத்தை போக்கிவிட்டது.

நாட்டை முடக்குவது என்பதை, ஒரு துளியேனும் நினைத்துக்கூட பார்க்கமுடியாது. எனினும், சுகாதார வழிமுறைகளை அச்சொட்டாகக் கடைப்பிடித்து, தடுப்பூசிகளை செலுத்திக்கொள்வதன் ஊடாக, ஒமிக்ரோன் மற்றும் அதனோடிணைந்த பிறழ்வுகள் தொற்றிக்கொள்வதைத் தடுக்க முடியும்.

அதுமட்டுமன்றி, தடுப்பூசி தொடர்பிலான மன அச்சத்தைக் களைய வேண்டும்; விருப்பத்தை ஊக்குவிக்க வேண்டும். தடுப்பூசி நிலையங்களை நாடுவோரை அலைக்கழிக்கவிடக்கூடாது. கொளுத்தும் வெயிலில், கால்கடுக்க நிற்க வைத்துவிடக்கூடாது. உச்சி வெயில் கொளுத்துவதற்கு முன்னரே, தடுப்பூசியை செலுத்திவிட்டு, நிலையங்களிலிருந்து அனுப்பிவைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

எப்பொழுதும் பிறரைப் பற்றிய தகாத விமர்சனங்களைச் செய்பவர்கள், தங்களைப் பற்றி எப்பொழுது உணரப்போகின்றார்கள்? தன்னைப் பற்றி உணராதவர்கள், தெரியாதவர்கள், தங்கள் நெஞ்சத்துடன் பேசுவதேயில்லை.

தங்களைத் தாங்களே அறிந்தால், தவறுகள் அகற்றப்படும். ஆனால், பாவபுண்ணியம் எதுவெனத் தெரியாதவர்கள் போல, அநேகர் நடித்துக்கொண்டே இருக்கின்றார்கள்.

உண்மைகளை மறைப்பதும் பொய்மைகளைப் பிடித்து வைத்திருப்பதும் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கி விடுவதாகும். தங்களது ஊரில் ஏதாவது நல்ல காரியங்களை ஊரவர்கள் செய்ய முனைந்தால், வேண்டுமென்றே எதிர்ப்புக் குரல் எழுப்பும் பேர்வழிகளை நீங்கள் அறிவீர்கள்.

தங்களுடைய எதிர்காலம் பற்றியே உணராமல், கெடுதல் செய்பவர்கள், எந்தவிதக் குற்ற உணர்வுமின்றி வாழ்வதே புதுமையாக இருக்கின்றது. தெரிந்தும் தவறுகளுக்குள் நுழைவது, சாக்கடைக்குள் நீந்துவதற்கு ஒப்பானது.

ஒரு கணமாவது உண்மைகளை உணர்ந்தால், விமோசனம் பெற வழியுண்டு. சுகவாழ்வும் சுபீட்சமும் பெற்றவர்களின் நிலை ஒழுக்கத்தின் பாற்பட்டது. அது நிலையானது. பரந்த மனம் விண்ணிலும் உயரமானது.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

சடலங்களாக கரை ஒதுங்குவதுதானா

# வடக்கு மீனவர்களின் விதி?



புருஜோத்தமன் தங்கமயில்

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, வத்திராயன் பகுதியில் இருந்து ஜனவரி 27ஆம் திகதி வியாழக்கிழமை, சிறிய படகொன்றில் தொழிலுக்காகக் கடலுக்குச் சென்ற மீனவர்கள் இருவர், நான்கு நாள்களின் பின்னர், சடலங்களாக மீட்கப்பட்டனர்.

கடலுக்குச் சென்றவர்கள் அடுத்த நாள் நீண்ட நேரமாகியும் கரைக்குத் திரும்பாததை அடுத்து, அவர்களைத் தேடும் பணிகளை, அந்தப் பகுதி மீனவர்கள் முன்னெடுத்தனர். அதன்போது, அவர்களின் வலைகள் வெட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டன. அதையடுத்து, தேடுதலை இன்னும் விரிவுபடுத்திய வடமராட்சிக் கிழக்கு மீனவர்கள், தொடர்ச்சியாக நான்கு நாள்களாக இரவு, பகலாக இயங்கினர்.

ஆனாலும், காணாமற்போன மீனவர்களை மீட்க முடியவில்லை. மாறாக, கடந்த 31ஆம் திகதி திங்கட்கிழமை, இருவரது சடலங்களையும் காண நேர்ந்தது. வடமராட்சிக் கிழக்கின் கேவில், ஆழியவளை ஆகிய பகுதிகளில் அவை கரை ஒதுங்கின.

இரண்டு மீனவர்களினதும் மரணம், இந்திய இழுவைப் படகுகளால் நிகழ்த்தப்பட்டதாக, வடக்கு மீனவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். ஏனெனில், வெட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட வலைகள், வழக்கமாக இந்திய இழுவைப் படகுகளால் வெட்டப்படும் வலைகளை ஒத்தனவாக இருந்திருக்கின்றன என்கின்றனர்.

சிறிய படகில் தொழில் நடவடிக்கையில் ஈடுபடும் வடக்கு மீனவர்களுக்கு, இந்திய இழுவைப் படகுகள் தொடர்ச்சியாக அச்சுறுத்தலாகவே இருந்து வருகின்றன. இழுவைப் படகு மோதியதில் உயிரிழந்த மீனவர்களின் படகு, கடலில் மூழ்கியிருப்பதாக வடக்கு மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இரு மீனவர்களும் காணாமற்போன நாள்களில் இந்திய இழுவைப் படகுகள், வடமராட்சிக் கடற்பரப்பில் கூப்பிடு தொலைவு வரை வந்து, தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன.

காணாமற்போன மீனவர்களின் சடலங்கள் மீட்கப்படுவதற்கு சில மணி நேரத்துக்கு முன்னால், அந்த மீனவர்களின் வீட்டுக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விஜயம் செய்தார். அன்றும், வடமராட்சி கிழக்கின் கரைகளுக்கு அண்மித்து, இந்திய இழுவைப் படகுகள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. கடற்றொழில் அமைச்சர், பயணித்த வடமராட்சிக் கிழக்கு கடற்கரை வீதியில் இருந்து பார்த்திருந்தாலே, அவற்றை அவதானிக்கக் கூடியதாக இருந்திருக்கும்.

இரண்டு மீனவர்களின் மரணத்தை அடுத்து, வடமராட்சி சுப்பர்மடம் பகுதி மீனவர்கள் பருத்தித்துறை - பொன்னாலை வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட ஆரம்பித்தனர். அத்தோடு, அன்று வடமராட்சிக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தலில் ஈடுபட்டிருந்த இந்திய இழுவைப் படகுகள் இரண்டை, சுற்றி வளைத்துப் பிடித்தனர். அந்த இரண்டு இழுவைப் படகுகளையும் சுப்பர்மடம் மீனவர்களிடம் இருந்து மீட்ட கடற்படை, அந்தப் படகுகளை தாங்களே பிடித்தது போன்று, நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைத்திருக்கின்றது.

வடக்கு கரையோரங்கள் முழுவதும் இலங்கை கடற்படையின் நூற்றுக்கணக்கான காவலரண்களும் பல பாரிய முகாம்களும் காணப்படுகின்றன. அந்த முகாம்களில் அதிகமானவை கரையோர மீனவர்களின் காணிகளில் அத்துமீறி அமைக்கப்பட்டிருக்கின்றன.

இலங்கையில் ஏனைய கடற்பரப்புகளை விடவும், வடக்கு கடற்பரப்பு அச்சுறுத்தல் அதிகமுள்ளது என்பதை கடற்படையும் அரசாங்கமும் தொடர்ச்சியாகக் கூறி வந்திருக்கின்றன. அதனால்தான், ஒரு சில கிலோ மீற்றர் தூரத்துக்குள்ளேயே பல காவலரண்களை கடற்படை அமைத்துமிருக்கின்றது. அந்தக் காவலரண்களிலும் பாரிய முகாம்களில் இருந்தும், கடலைக் கண்காணிப்பதுதானே கடற்படையின் பணியாக இருக்க வேண்டும்?

ஆனால், அந்தப் பணியை கடற்படை சரியாகச் செய்வதில்லை. அவர்களின் கண் முன்னாலேயே, இந்திய இழுவைப் படகுகள் தொழில் நடவடிக்கைகளில் எந்தவித பயமும் இன்றி ஈடுபடுகின்றன. வடக்கு மீனவர்கள், இந்திய இழுவைப் படகுகளைப் பிடிக்க முற்படும் தருணங்களிலும் இன்னும் சில தருணங்களிலும்தான், கடற்படை செயற்படுவது போல காட்டிக் கொள்கின்றது.

கடந்த நல்லாட்சிக் காலத்தில், பாராளுமன்றத்தில் இழுவை மடித் தடைச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றது. இந்தச் சட்டமூலம், இலங்கை கடல் வளங்களை பாதுகாக்கும் நோக்கில், மீனவர்களின் வேண்டுகோள்களின் பேரில், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

பாரிய இழுவைப் படகுகள், தங்களது பாரிய மடிகளை, கடலின் அடி ஆழம் வரை விரித்து, கடல் வளங்களைச் சூறையாடுகின்றன. அதனால், மீன் உற்பத்தி அழிக்கப்படுகின்றது. இது, கடலை நம்பி பல்லாயிரம் ஆண்டுகளாக வாழும் மீனவர்களைப் பாதிக்கின்றது. அதனாலேயே, தங்களது கடல் தாயை பாதுகாக்கும் நோக்கில், வடக்கு மீனவர்களில் 95 சதவீதமானவர்கள் இழுவை மடி தொழில் முறையை எதிர்க்கின்றனர்; அல்லது, அவர்களால் பாரிய இழுவைப் படகுகளைக் கொண்டு மீன்பிடிக்கத் தெரியாமல் இல்லை.

இந்நிலையில், பாரிய போராட்டங்களின் பின்னால் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற இழுவை மடி தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினாலேயே, வடக்கு மீனவர்களின் பெரும் பிரச்சினையொன்று தீர்வுக்கு வந்துவிடும்.

ஏனெனில், எல்லை தாண்டி வந்து தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் இந்திய மீனவர்களில் 90 சதவீதமானவர்கள், பாரிய இழுவை மடித் தொழிலிலேயே ஈடுபடுகின்றனர். ஒரு நாட்டின் சட்டம், தன்னுடைய சட்ட எல்லைக்குள் அனைவருக்கும் பொதுவானதாக இருக்கும். அப்படியான நிலையில், இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி இழுவை மடிகளை விரித்து, கொள்ளையடிக்கும் இந்திய இழுவைப் படகுகளைத் தடுக்க முடியும். ஆனால், கடற்றொழில் அமைச்சரோ, அரசாங்கமோ இழுவை மடித் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றன.

அதற்கு, தென் இலங்கையின் இனவாத அரசியல் சிந்தனை, பிரதான காரணமாகும். வடக்கு மீனவர்களும் இந்திய மீனவர்களும் மோதிக் கொள்ளும் நிலையைப் பேணுதல் என்பது, ஈழத் தமிழர்களுக்கும் தமிழகத் தமிழர்களுக்கும் இடையிலான முரண்பாடுகளை அதிகரிக்கும் நோக்கிலானது.

அடிப்படையில், ஈழத்தமிழர்களும் தமிழக தமிழர்களும் இலங்கை, இந்திய மீன்பிடி பிரச்சினையை வைத்து முரண்பட வேண்டிய எந்தத் தேவையும் இல்லை. ஏனெனில், இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்தல் என்கிற பெயரில், கடற்கொள்ளையில் இடுபடும் இழுவைப் படகுகளில் அநேகமானவை, பெரு முதலாளிகளுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் சொந்தமானவை.

தமிழக மீனவர்களில் அதிகமானவர்களும் கூட, இழுவை மடி தொழில் முறைக்கு எதிரானவர்களே! இந்நிலையில், பெருமுதலாளிகள் சிலர் தின்று கொழுப்பதற்காக கடல் வளம் அழிக்கப்படுகின்றது.

நாட்டில் ஆயுதப் போராட்டம் நீடித்த 30 ஆண்டுகளாக, வடக்கு மீனவர்களின் தொழில் முடங்கிப் போயிருந்தது. அப்போதும் இந்திய இழுவைப் படகுகளே வடக்கு கடற்பரப்பை சூறையாடிச் செல்ல எத்தனித்தன. ஆனால், ஒரு கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தடுத்து நிறுத்தினர். அப்போது, தமிழக மீனவர்களுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் எந்தவித பிரச்சினையும் முரண்பாடுகளும் ஏற்படவில்லை. ஏனெனில், நியாயமான நடைமுறைகளைப் பேணுவதால், யாரும் மனம் நோகவேண்டியதில்லை.

ஆனால், முள்ளிவாய்க்கால் முடிவின் பின்னர், இந்திய இழுவைப் படகுகள் ஆயிரக்கணக்கில் வடக்கில் கரைகளில் நாள்கணக்கில் நின்று, தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்தன. இவ்வாறான நெருக்கடிகளுக்கு எதிராக, கடந்த 12 ஆண்டுகளாக வடக்கு மீனவர்கள் தொடர்ச்சியாகப் போராடியே வந்திருக்கிறார்கள்.

வத்திராயன் மீனவர்களின் மரணத்தை அடுத்து, வடமராட்சிக் கிழக்கு மக்கள், மருதங்கேணி பிரதேச செயலகத்தை முடக்கி, போராட்டத்தை செவ்வாய்க்கிழமை (01) முன்னெடுத்தனர். அப்போது, அங்கு வந்த கடற்றொழில் அமைச்சர், இந்திய அதிகாரிகளுடன் பேசியிருப்பதாகவும் இறந்த மீனவர்களுக்கு நட்டஈட்டினைப் பெற்றுக் கொடுக்க முயற்சிப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார். ஆனால், தமக்குத் தொடர் அச்சுறுத்தலாக இருக்கும் இந்திய இழுவைப் படகுகளைத் தடுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக, எழுத்து மூல உத்தரவாதத்தை வழங்குமாறு, மீனவர்கள் கோரினார்கள். ஆனால், அவ்வாறான எழுத்துமூல உத்தரவாதத்தைத் தன்னால் வழங்க முடியாது என்று கூறிச் சென்றிருக்கின்றார் அமைச்சர்.

நிறைவேற்றப்பட்ட சட்டத்தை அமல்படுத்தினாலேயே பிரச்சினை தீர்ந்துவிடும் என்கிற நிலையில், அதைச் செய்வதற்கான எந்த எத்தனத்தையும் செய்யாத ஒருவர், அதுவும் வடக்கு மக்களால் தேர்தெடுக்கப்பட்ட ஒருவர், அமைச்சராக இருந்து என்ன பயன் என்றுதான் கேட்க வேண்டியிருக்கின்றது. டக்ளஸ் தேவானந்தா யார் யாரையோ மகிழ்ச்சிப்படுத்துவதற்காக, மீனவர்களின் வயிற்றில் அடிக்கும் வேலைகளுக்கு ஒத்துழைக்கக்கூடாது. இப்போது, அவர் அதனைத்தான் செய்து கொண்டிருக்கிறார்.

## கடிதங்கள்

உயிலங்குளத்தின் அணைக்கட்டு சேதம்:

### விரைவில் புனரமைக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள உயிலங்குள அணைக்கட்டின் ஒரு பகுதி சேதமடைந்து, நீண்டகாலமாகக் காணப்படுகின்ற போதிலும், இதுவரை புனரமைக்கப்படாமையால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

உயிலங்குளத்தின் கீழ் 139.5 ஏக்கர் வரையான வயல் நிலங்களில் 73 க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் நிலையில், அணைக்கட்டின் சேதமடைந்த பகுதி, தற்காலிக புனரமைப்பு வேலைகள் செய்யப்பட்ட நிலையில், அடிக்கடி அது சேதடைந்து விடுகின்றது. எனவே, நிரந்தரமான புனரமைப்பு பணிகள் இதுவரை முன்னெடுக்கப்படாமையால், எதிர்காலத்தில் குளத்தில் போதியளவு நீரை சேகரித்தல், பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலை உருவாகிவிடும்.

எனவே, குறித்த குளத்தின் நீர் கொள்ளளவை அதிகரித்து, பெரும் போகத்திலும் சிறு போகத்திலும் பயிர்செய்கையை மேற்கொள்ள கூடிய வகையில், புனரமைத்துத் தர வேண்டும் என்ற கோரிக்கையை, தொடர்ச்சியாக விவசாய அமைப்புகள், விவசாயிகள் முன்வைத்து வருகின்ற போதும் இதுவரை புனரமைக்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-யது பாஸ்கரன்

புதுடெல்லி

பட்ஜெட் துளிகள்:

# வரி குறைப்பு இல்லாததால் மன்னிப்பு கேட்டார் நிதியமைச்சர்

* மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் பட்ஜெட் உரை, 1:32 மணி நேரத்துக்க நீடித்தது. இது, அவர் தாக்கல் செய்துள்ள நான்காவது பட்ஜெட். 2019இல் 2:17 மணி நேரத்துக்கு பட்ஜெட் உரை நீடித்தது. இந்திய வரலாற்றில், அதிக நேரம் பட்ஜெட் உரையை நிகழ்த்திய நிதி அமைச்சர் என்ற சாதனையை அவர் அப்போது படைத்தார்.

* இரண்டாவது முறையாக காகிதமில்லா, 'டிஜிட்டல் பட்ஜெட்' தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த முறை, 'டேப்லெட்' சாதனத்தை பயன்படுத்தி, பட்ஜெட் உரை நிகழ்த்தினார். இந்தியாவில் இந்த டேப்லெட் தயாரிக்கப்பட்டதாகும்.

* குஜராத்தில், சர்வதேச நிதி தீர்ப்பாயம் அமைப்பது குறித்து நிதி அமைச்சர் அறிவித்தபோது, திரிணமுல் காங்கிரஸ், தி.மு.க ஆகிய கட்சிகள் அதை விமர்சித்து குரல் கொடுத்தனர். "இது மத்திய பட்ஜெட்டா அல்லது குஜராத்துக்கான பட்ஜெட்டா" என கேள்வி எழுப்பினர்.

* பட்ஜெட் உரையில், 'டிஜிட்டல்' என்ற வார்த்தை அதிகபட்சமாக 34 முறையும் 'கேப்பிடல்' 33; 'ராக்ஸ்' 28; 'இன்பிராஸ்டிரக்சர் மற்றும் இன்வெஸ்ட்மென்ட்' 26; 'கஸ்டம்ஸ்' 20; 'எர்பன்' 19; 'எனர்ஜி' 18; 'ஹெல்த்' 17; 'கதிசக்தி' 13; 'பார்மர்ஸ் மற்றும் டெக்னாலஜி' 12 முறையும் உரையில் இடம்பெற்றன.

* வழக்கமாக, இந்தி, தமிழ், உருது கவிதை வரிகளை குறிப்பிட்டு பேசும் அமைச்சர் நிர்மலா சீதாராமன், இந்த முறை மகாபாரத இதிகாசத்தில் இருந்து, 72வது ஸ்லோகத்தை கூறி, "குடிமக்களின் நலனை உறுதிப்படுத்த தாமதமின்றி மன்னன் அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். தர்மத்தின் வழியில் ஆட்சி நடத்த வேண்டும். தர்மத்தின் வழிநின்று வரி வசூலிக்க வேண்டும்" என, அதற்கான விளக்கத்தையும் அளித்தார்.

* வரி குறைப்பு குறித்து அறிவிக்கப்படாததற்கு, செய்தியாளர்களிடம் நிர்மலா சீதாராமன் கூறுகையில், "வரி குறைப்பு குறித்து அறிவிப்பு வெளியிடாததற்கு என்னை மன்னியுங்கள். இதற்கு முன், பல முறை வரிகள் குறைக்கப்பட்டுள்ளன. மக்கள் சற்று பொறுமையுடன் காத்திருக்க வேண்டும்" என்றார்.

சென்னை:



பெற்றோல், டீசல், காஸ் விலைகளில்

## மூன்று மாதங்களாக மாற்றமில்லை

தமிழகத்தில் தொடர்ந்து நான்கு மாதங்களாக சமையல் காஸ் விலை மாற்றப்படாமல் 915.50 ரூபாயாகவே நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. அதேபோல், 90ஆவது நாளாக பெட்ரோல், டீசல் விலையிலும் மாற்றம் இல்லை.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை நிலைவரத்துக்கு ஏற்ப மாதந்தோறும் காஸ் விலை, பெற்றோல், டீசல் என்பவற்றில் மாற்றம் செய்யப்படுகிறது. தமிழகத்தில் 2021 அக்டோபர் மாதம் சமையல் எரிவாயு சிலிண்டர் 915.50 ரூபாய்க்கு விற்கப்பட்டது. அதன் விலை நவம்பர், டிசெம்பர், 2022 ஜனவரி என மாற்றப்படவில்லை.

அதேபோல், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை நிலவரத்திற்கு ஏற்ப, பெட்ரோல், டீசல் விலை நிர்ணயம் செய்யப்படுகின்றது. 2021 நவம்பர் நான்காம் திகதி ஒரு லிட்டர் பெட்ரோல் 101.40 ரூபாய்க்கும் டீசல் 91.43 ரூபாய்க்கும் விற்பனையாகின. நேற்று (02) வரை 90 நாள்களாகியும், பெட்ரோல், டீசல் விலையில் மாற்றம் இல்லை. இது, வாகன ஓட்டிகளிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை:

## 'விக்'குக்கள் தங்கம் கடத்திய பெண்கள்

இலங்கையில் இருந்து சென்றவர்கள் சென்னையில் கைது



இலங்கையில் இருந்து ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் விமானம் நேற்று முன்தினம் (01) இரவு சென்னை சர்வதேச விமான நிலையத்துக்கு வந்தது. அதில், சென்னையை சேர்ந்த மூன்று பெண்கள் ஒரு குழுவாக வந்தனர். அவர்கள் தங்களிடம், சுங்கத்தீர்வை செலுத்தும் பொருட்கள் எதுவும் இல்லை என்று கூறிவிட்டு கிரீன் சேனல் வழியாக வெளியில் செல்ல முயன்றனர்.

சந்தேகத்தின் பேரில், பெண் சுங்க அதிகாரிகளை வரவழைத்து, அந்தமூன்று பெண்களையும் தனி அறைக்கு அழைத்து சென்று சோதனையிட்டனர். அப்போது, அவர்கள் அணிந்திருந்த 'விக்' எனப்படும் அலங்கார கூந்தலில் தங்க வளையல்கள், சிறிய தங்கக்கட்டிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை கண்டுபிடித்தனர்.

மேலும், உள்ளாடைகளில் தங்கப்பசைகள் அடங்கிய சிறிய பிளாஸ்டிக் பாக்கெட்களை மறைத்து வைத்திருந்ததையும் கண்டுபிடித்தனர். மூன்று பேரிடம் இருந்தும் 525 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. இதன் மதிப்பு 23 இலட்சம் இந்திய ரூபாயாகும். தங்கத்தை பறிமுதல் செய்த அதிகாரிகள் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

சென்னை:

பெரிய கட்சிகளில்

## திருநங்கைகளுக்கு வாய்ப்பு



தமிழகத்தில் நடைபெற இருக்கும் நகர்ப்புற உள்ளூராட்சித் தேர்தலில் முக்கிய கட்சிகளான தி.மு.க, அ.தி.மு.க, பா.ஜ.க ஆகியவை திருநங்கைகளை வேட்பாளர்களாக களமிறங்கியுள்ளன.

தமிழகத்தில் அரசியல் வரலாற்றில் முதல் முறையாக விடுதலை சிறுத்தைகள் கட்சி தொடங்கி வைத்த அரசியல் அங்கிகாரம் இன்று அனைத்து கட்சிகளும் பின்பற்றி வருகின்றன. அந்தவகையில் வேலூர் மாநகராட்சியில் 37 வது வட்டார கவுன்சிலராக திருநங்கை கங்காவை தி.மு.க களமிறக்கியுள்ளது. சென்னை மாநகராட்சியில் தேனாம்பேட்டை மண்டலத்தில் 112 வட்டாரத்துக்கு அ.தி.மு.க சார்பாக திருநங்கை ஜெயதேவியை களமிறக்கியுள்ளது. சென்னை திருவிக நகர் மண்டலத்தில் 76 வது வட்டாரத்தில் பா.ஜ.க திருநங்கை ராஜம்மாவை களமிறக்கியுள்ளது.

ஸ்ரீவைகுண்டம்:

ஆணி படுக்கையில் நின்று

## சிலம்பம் சுற்றும் முதியவர்



தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் அருகே உள்ள ஆழ்வார்திருநகரியைச் சேர்ந்தவர் சண்முகசுந்தரத்துக்கு 75 வயது. நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

இவர், 2022 ஆணிகள் கொண்ட 'ஆணி படுக்கை'யின் மேல் நின்று, இரண்டு கைகளில் சிலம்ப கம்புகள், இரண்டு மான் கொம்பு, இரண்டு கர்லா கட்டை, ரெங்க ராட்டினம், இரண்டு வாள்களை வைத்து சுற்றி அசத்தி வருகிறார். மேலும் சிலம்பம், சுருள்வாள், வாள், கந்த கோடாரி, வேல்கம்பு, கராத்தே, சூலாயுதம் போன்ற விளையாட்டிலும் அசத்தி வருகிறார்.

இவர்,2004ஆம் ஆண்டு நல்லாசிரியர் விருது பெற்றுள்ளார். மேலும் இந்த சிலம்ப கலையில் 2014ஆம் ஆண்டு 'கலைமுதுமணி' விருது பெற்றுள்ளார். 2017ஆம் ஆண்டு சிலம்பத்தில் வாழ்நாள் சாதனையாளர் விருதும் பெற்றுள்ளார். யோகாவில் 'ஏசியன் புக் ஆப் ரெக்கார்ட்' செய்துள்ளார்.

தற்போது,ஆழ்வார்திருநகரியில் உள்ள பள்ளி மைதானத்தில் 100க்கும் மேற்பட்ட பாடசாலை, கல்லூரி மாணவ-மாணவிகளுக்கு சிலம்பம் பயிற்சி அளித்து வருகிறார்.

புதுடெல்லி:

## காரில் தனியாக செல்பவர் முகக்கவசம் அணிய வேண்டுமா?

தனியாக வாகனம் ஓட்டுபவரும் முகக்கவசம் அணிவது கட்டாயம் என்ற புதுடெல்லி அரசாங்கத்தின் உத்தரவு அபத்தமானது என்று அம்மாநில உயர்நீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

புதுடெல்லியில் கார் ஓட்டுபவர், தனியாக இருந்த போதும் முகக்கவசம் அணியவில்லை என்று பொலிஸார் அபராதம் விதித்து வந்ததற்கு எதிராக, பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து, நீதிமன்றம் விசாரணை செய்தது.

அதன்படி, இந்த வழக்கை விசாரித்த இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வு, தனியாக வாகனம் ஓட்டுபவரும் முகக்கவசம் அணிவது கட்டாயம் என்ற விதி நடைமுறைக்கு பொருந்தாது. இந்தக் கட்டுப்பாடு அபத்தமான ஒன்று. இந்த உத்தரவை புதுடெல்லி அரசாங்கம் ஏன் திரும்பப் பெற கூடாது என்று கேள்வி எழுப்பியது.

## 102 வருடங்கள்









திருகோணமலை மாவட்டத்தில் சாரணியம், புனித சூசையப்பர் கல்லூரியில் வணக்கத்துக்குரிய அருட்தந்தை கிரஹரினால் 1920.02.01 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சாரணியத்துக்கு 102 வருடங்கள் நிறைவடைகிறது.

இதனை நினைவுகூரும் நிகழ்வுகள், புனித சூசையப்பர் கல்லூரி சாரணர்களால் செவ்வாய்கிழமை (01) மேற்கொள்ளப்பட்டன.

கல்லூரி அதிபர் அருட்தந்தை அல்பிரட் விஜயகமலன், பிரதி அதிபர் ரஜீவா, மாவட்ட சாரணர் ஆணையாளர் சி.சசிகுமார், முன்னாள் சாரணர் ஆசிரியர் அ.அகிலன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

(படங்களும் தகவலும் கதிரவன்)



## சான்றிதழ் வழங்கும் வைபவம்

ஸரின் அழகுக் கலையில் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்த அழகுக் கலை ஒப்பானையாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம், கண்டி ஓக் ரே ஹோட்டலில் ஸரின் அழகுக் கலை கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் சரின் ஶ்ரீபிரியா தலைமையில் நடைபெற்றது.

அந்நிகழ்வில், பிரதம அதிதியாக நுவரெலியா மாவட்ட பாராளுன்ற உறுப்பினரும் மலைய மக்கள் முன்னணியின் தலைவருமான வி. இராதாகிருஸ்ணன் கலந்துகொண்டார்.







## குருநாகலில்







குருநாகலில் மூன்று மாடி பிரதேச சபைக் கட்டடத்தின் திறப்பு விழா நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோரின் தலைமையில் நேற்று (02) நடைபெற்றது.

மாகாண சபைகள் அமைச்சின் புரநெகும திட்டம் மற்றும் உள்ளூராட்சி மன்ற நிதியை பயன்படுத்தி இந்தப் புதிய மூன்று மாடி பிரதேச சபை கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 215 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. புதிய கட்டடத்திற்கான அடிக்கல் 2019 இன் பிற்பகுதியில் நாட்டப்பட்டது. இரண்டு ஆண்டுகளில் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

## வைபவரீதியாக ஆரம்பம்



நுவரெலியா பிரதேச செயலகத்தின் தலவாக்கலை உப செயலகத்தில் அனைத்துப் பணிகளும் வைபவ ரீதியாக நேற்றைய தினம் நேற்று (2) ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதில், நுவரலியா பிரதேச செயலகத்தில் செயலாளர் விதுர சம்பத், தலவாக்கலை -லிந்துலை நகரசபை தலைவர் லெட்சுமண் பாரதிதாசன் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(படங்கள்: துவாரகஷான்)







அமெரிக்கா

தனியார் பாடசாலையில் துப்பாக்கிச் சூடு:

# மாணவர் உட்பட மூவர் உயிரிழப்பு




தனியார் பாடசாலையொன்றில் மர்ம நபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், மாணவர் உட்பட 3 பேர் உயிரிழந்த சம்பவம் அமெரிக்காவில் நேற்று முன்தினம் (01) இடம்பெற்றுள்ளது.

அமெரிக்கா, விர்ஜினியா மாகாணத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்துவரும் ஒரு தனியார் பாடசாலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த பாடசாலை வளாகத்திற்குள் துப்பாக்கியுடன் நுழைந்த மர்ம நபர், திடீரென தாக்குதலில் ஈடுபட்டதாகவும், இதில் அப் பாடசாலை மாணவர், பாதுகாப்பு அதிகாரி உட்பட மூவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் அந்நாட்டுப் பொலிஸார் இருவரைக் கைது செய்துள்ளதாகவும், துப்பாக்கிச் சூடுக்கான காரணம் குறித்து இதுவரை தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான்



ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்ட

# இருவருக்குத் தூக்கு

ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்ட ஆண்கள் இருவர் தூக்கில் இடப்பட்ட சம்பவம் ஈரானில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான ஈரானில் ஓரினச்சேர்க்கை, திருநங்கையருடனான உறவு, விபசாரம் ஆகியவை பெரும் குற்றங்களாகக் கருதப்படுவதோடு, அவ்வாறான செயல்களில் ஈடுபட்டு வருபவர்களுக்கு மரண தண்டனை உள்ளிட்ட கடுமையான தண்டனைகளும் விதிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மராகேவில் உள்ள சிறையில் சமீபத்தில் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஆண்கள் இருவர் தூக்கில் போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே குற்றச்சாட்டில் சிக்கிய இருவர் கடந்த ஆண்டு ஜூலையில் மராகே சிறையில் தூக்கிலிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




பராகுவே

பிரபல கால்பந்து வீரரின்

# மனைவி துப்பாக்கி சூட்டில் மரணம்

மர்ம நபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், பராகுவே நாட்டின் பிரபல கால்பந்து வீரரான இவான் டாரஸின் மனைவி கிறிஸ்டினா உயிரிழந்த சம்பவம் அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தென் அமெரிக்க நாடான பராகுவேயில் உள்ள சான் பெர்னாடினோ நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இசை நிகழ்ச்சியொன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டதாகக் கூறப்படும் குறித்த நிகழ்ச்சியில், மர்மநபர் ஒருவர் தான் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியால் அங்கிருந்தவர்களை நோக்கிச் சரமாரியாக துப்பாக்கிச் சூடு மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் 4 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், அவர்களில் பராகுவே கால்பந்து வீரர் இவான் டாரஸின் மனைவியும், மொடல் அழகியுமான கிறிஸ்டினா விட்டா அரண்தாவும் அடங்குகின்றார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்பந்து வீரர் இவானும் அவரது மனைவி கிறிஸ்டினாவும் 10 ஆண்டு கால திருமண வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க திட்டமிட்டு இருப்பதாக சமீபத்தில் கிறிஸ்டினா அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் துப்பாக்கிச் சூட்டில் பரிதாபமாக உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒலிம்பிக் ஜோதியுடன் இணையும் இயந்திரக் கை



சீன தலைநகர் பெய்ஜிங்கில் எதிர் வரும் 4ஆம் திகதியிலிருந்து 20ஆம் திகதி வரை குளிர்கால ஒலிம்பிக் போட்டித் தொடர்கள் நடைபெறவுள்ளன.

சுமார் 30 நாடுகள் கலந்து கொள்ளும் இவ் ஒலிம்பிக் போட்டித் தொடருக்குத் தேவையான ஏற்பாடுகள் வெகு விமரிசையாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், பெய்ஜிங் மாகாணத்திற்கு வந்த ஒலிம்பிக் ஜோதி, முக்கிய நகரங்களின் வழியே பயணிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மலைப்பகுதிகள், சீனப்பெருஞ்சுவர் வழியாக ஒலிம்பிக் ஜோதி கொண்டு செல்லப்படுகிறது. இதில் ரோபோ உதவியோடு நீரின் வழியே ஜோதியை கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 4ஆம் திகதியன்று 'பறவைக்கூடு' என்ற விளையாட்டு மைதானத்தில் ஒலிம்பிக் ஜோதி ஏற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனி

# மொட்டைத் தலையுடன் எலிசபெத் மகாராணி





ஜேர்மனியில் உள்ள அருங்காட்சியகம் ஒன்றில் பிரித்தானிய மகாராணி எலிசபெத்தின் சிலை மொட்டைத்தலையுடன் வைக்கப்பட்ட சம்பவம் உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அருங்காட்சியக நிர்வாகப் பங்குதாரரான சுசன்னே ப்வர்பர் "நாங்கள் பணத்தைச் சேமிப்பதற்காக இவ்வாறு செய்ய வேண்டியதாயிற்று. பார்வையாளர்களுக்குத் தெரியும் அளவிலான தலைமுடியை மட்டுமே நாங்கள் பொருத்தியுள்ளோம். இது ஒரு மெழுகு சிற்பம் தான், உண்மையான நபர் அல்ல; இதை எப்போதும் மனதில் கொள்ள வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர், குறித்த அருங்காட்சியகத்தில் டொனால்ட் ட்ரம்ப், போப் பெனடிக்ட் XVI, காலநிலை ஆர்வலர் கிரேட்டா துன்பெர்க், ஜேர்மனியின் முன்னாள் ஜனாதிபதி ஏஞ்சலா மெர்க்கல் போன்ற பிரபலங்களின் சிலைகள் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடரில்

# சம்பியனான கற்பிட்டி பிரதேச செயலகம்

■ எம்.யூ.எம். சனூன்

புத்தளம் மாவட்ட செயலகம் ஏற்பாடு செய்திருந்த புத்தளம் மாவட்ட பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான சுதந்திர தின வெற்றி கிண்ண மென்பந்தாட்டத் தொடரானது வென்னப்புவ அல்பட் பீரிஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இத்தொடரில் புத்தளம் மாவட்ட செயலகத்துக்குட்பட்ட 16 பிரதேச செயலக அணிகளும், புத்தளம் மாவட்ட செயலக அணி மற்றும் புத்தளம் நகர சபை அணி அடங்கலாக 18 அணிகள் பங்கேற்றிருந்தன.

18 அணிகளும் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு விலகல் முறையில் இடம்பெற்ற தொடரில், தான் சந்தித்த முதல் மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்ற கற்பிட்டி பிரதேச செயலக அணியும், ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலக அணியும் முதல் அரையிறுதியில் மோதியது. இதில் இலகு வெற்றி பெற்ற கற்பிட்டி பிரதேச செயலக அணி முதல் அணியாக இறுதிப் போட்டிக்கு தெரிவானது.

பின்னர் இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதி போட்டியில் புத்தளம் பிரதேச செயலக அணியை வீழ்த்திய வண்ணாத்திவில்லு பிரதேச செயலக அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

இறுதிப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வண்ணாத்திவில்லு பிரதேச செயலக அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய கற்பிட்டி பிரதேச செயலக அணி நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பின்னர் 44 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வண்ணாத்திவில்லு பிரதேச செயலக அணி கற்பிட்டி பிரதேச செயலக அணியின் மிகத்துல்லியமான பந்துவீச்சில் தடுமாற்றம் கண்டு 4.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 35 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொள்ள விறுவிறுப்பான இறுதிப் போட்டியில் கற்பிட்டி பிரதேச செயலக அணி 8 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியன் மகுடத்தை தனதாக்கிக் கொண்டது.

இத்தொடரின் பரிசளிப்பு விழாவில் அதிதிகளாக புத்தளம் மாவட்ட செயலாளர், உதவி செயலாளர் மற்றும் பிரதேச செயலகங்களின் செயலாளர்கள் என அனைவரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



மீராவோடை யூத் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின்

# 18ஆவது ஆண்டு நிறைவு விழாவும், ரீ சேட் அறிமுக நிகழ்வும்

■ எச்.எம்.எம். பர்ஸான்

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மீராவோடை யூத் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் 18ஆவது ஆண்டு பூர்த்தி விழாவும் புதிய ரீ சேட் அறிமுக நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது.

மீராவோடை அந்நூர் கேட்போர் கூடத்தில் கழகத் தலைவர் எம். நியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அதிதிகளாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், சட்டத்தரணி ஹபீப் றிபான் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# ஹலாண்டைக் கைச்சாத்திட முயலும் சிற்றி

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பொரூசியா டொட்டமுண்டின் முன்களவீரரான எர்லிங் பிறோட் ஹலாண்டைக் கைச்சாத்திட இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி முயல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட்டுக்கே செல்ல 21 வயதான ஹலாண்ட் விரும்புகின்றமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறெனினும், பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரரான கிலியான் மப்பேயைக் கைச்சாத்திடுவதையே றியல் மட்றிட் முதன்மையான நோக்கமாகக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

# பொலிவியாவை வென்ற சிலி




கட்டாரில் இவ்வாண்டு நடைபெறவுள்ள சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் உலகக் கிண்ணத் தொடரின் தென்னமெரிக்க கால்பந்தாட்டச் சம்மேளன தகுதிகாண் போட்டிகளில், பொலிவியாவில் நேற்றுக் காலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் சிலி வென்றிருந்தது.

சிலி சார்பாக, அலெக்ஸிஸ் சந்தேஸ் இரண்டு கோல்களையும், மார்செலினோ நுனுஸ் ஒரு கோலையும் பெற்றனர். பொலிவியா சார்பாக, மார்க் எனௌம்பா, மார்செலோமார்டின்ஸ்மொரேனோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

உருகுவேயில் நடைபெற்ற அவ்வணி போட்டியில் 4-1 என்ற கோல் கணக்கில் வெனிசுவேலா வென்றிருந்தது. உருகுவே சார்பாக, றொட்றிகோ பென்டாக்கூர், ஜியோர்ஜியன் டி அரஸ்கடெயா, எடின்சன் கவானி, லூயிஸ் சுவாரஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். வெனிசுவேலா சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜொசெஃப் மார்டின்ஸ் பெற்றிருந்தார்.

ஆர்ஜென்டீனாவில் நடைபெற்ற போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் அவ்வணி கொலம்பியாவை வென்றிருந்தது. ஆர்ஜென்டீனா சார்பாகப் பெறப்பட்ட கோலை லொட்டரோ மார்ட்டினஸ் பெற்றிருந்தார்.

பிரேஸிலில் நடைபெற்ற போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் பராகுவேயை அவ்வணி வென்றிருந்தது. பிரேஸிலில், றபின்ஹா, பிலிப் கோச்சினியோ, அந்தோனி, றொட்றிகோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 03 பெப்ரவரி 2022, இல. 08, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.